மாலைமணி

ஆசிரியர்:
பி.எஸ்.இளங்கோ

மாலைமணி
ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 — 22-5-60 — ஒலி 29

நாம் மனித இனமா?

"அரிது, அரிது, மானிடராய்ப் பிறப்பது அரிது" என்று மனித இனத்தைப் பற்றி சிலர் பெருமையடித்துக் கொள்ளுகிறார்கள்!

"உலகத்தில் வாழும் எல்லா ஜீவன்களைக் காட்டிலும் மனித ஜீவனே மிக உயர்ந்த ஜீவன்" என்று புகழ்ந்து, புகழ்ந்து பேசுகிறார்கள்!

"மனித இனத்திற்கு மட்டுமே பகுத்து உணர்ந்து பார்க்கும் தன்மை உண்டு" என்றும் கூறிவருகிறார்கள்! அது உண்மை தான்! இல்லை என்று நாங்கள் மறுக்கவுமில்லை!

ஆனால், இந்த நாட்டில் அந்த மனித இனம் வாழ்கிறதா? அதற்கு மதிப்புத்தரப்படுகிறதா? என்பதைப் பற்றியெல்லாம்—எடை முறை செய்கையை வைத்துக்கொண்டு ஆராய்ந்தால் தான் முடிவு காண முடியும், தெளிவும் காணமுடியும்!

"எது நல்லது, எது கெட்டது!' என்பதை மனிதனால் தான் உணர்ந்து பார்க்கமுடியும்' என்பதை இந்த நாட்டில் எவருமே நம்பியதாகத் தெரியவில்லை!

"மனிதனுக்குப் பகுத்தறிவு உண்டு! எதையும் உணர்ந்து கொள்ளும் சக்தி உண்டு"—எது நல்லது எது கெட்டது என்பதை மனிதனால் எளிதில் அறிந்து கொள்ள முடியும் என்பதை நம்முடைய அமைச்சர்கள் அடியோடு நம்பவில்லை என்றே கூறவேண்டும்!

அந்த நம்பிக்கை, நம்முடைய அமைச்சர்களுக்கு இருக்குமானால் நாடு இந்த கதியை அடைந்திருக்குமா? நிச்சயமாக அடைந்திருக்காது, நிச்சயம் அடைந்திருக்காது!

மனித இனத்திற்குப் பகுத்தணர்ந்துப் பார்க்கும் தன்மை இல்லை என்பதை அவர்கள் நம்பிய காரணத்தால் தான் நாட்டைச் சுடுகாடாக்கி விட்டு ராஜதர்பார் செய்து வருகிறார்கள்!

நாடு விடுதலையடைந்து, பத்துப் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு மேல ஆகிவிட்டன! இன்னும் பஞ்சம் தீரவில்லை, பசி ஒழியவில்லை! காரணம என்ன?

சுதந்திரம் கிடைத்த ஆரம்ப காலத்தில் வெள்ளைக்காரன் மீது குற்றம் சாட்டி வந்தார்கள்! சிறிது காலத்துக்குப் பிறகு அதே நிலை நீடித்தது! அப்போது—"தத்தித் தவழும் சுதந்திர குழந்தையால் எதைச் செய்ய முடியும்' என்று கூறினார்கள்! அதற்குப் பிறகு "எட்டு வயது தானே' என்றார்கள்! இப்போது கேட்டால் "சுதந்திர வாலிபனுக்கு இன்னும திருமணமாகவில்லை, அதற்குள் எப்படி குழந்தை பிறக்கும்" என்று கூட கூறுவார்கள்! இப்படிக் கூறுவது எதைக் காட்டுகிறது "இங்குள்ள மனிதர்களுக்கு பகுத்துணர்ந்துப் பார்க்கும் சக்தியில்லை, எதைச் சொன்னாலும் "சரி, சரி" என்று தலையாட்டுவார்கள்" என்ற எண்ணம் தானே?

நாம் இதைப் பற்றி மக்களிடம் எடுத்துச் சொன்னால் நமக்குக் கொள்கை இல்லை என்கிறார்கள், துரோகிகள் என்கிறார்கள், வெள்ளைக்காரனுடைய குலாம் என்கிறார்கள்! இப்படிச் சொல்லும் தைரியம் அவர்களுக்கு எப்படி வந்தது? இந்த நாட்டில் வாழும் மக்கள் எதையும் சிந்திக்க மாட்டார்கள், எதையும் பகுத்து, உணர்ந்து பார்க்க மாட்டார்கள் என்ற குருட்டு நம்பிக்கை தானே?

அமைச்சர்கள் அப்படி எண்ணுவது ஓரளவு சரி என்று கூட சில சமயங்களில் எண்ண வேண்டி இருக்கிறது!

மக்கள் குடிக்கக் கஞ்சி இன்றித் தவிக்கிறார்கள்! கட்டத் துணியின்றி மானத்தை ஏலம் போடுகிறார்கள்! இருக்க இடமின்றி வீதிகளிலே திரிகிறார்கள்! என்றாலும் காங்கிரஸ் கட்சி நாடாண்டு தான் வருகிறது! அவர்கள் எண்ணுவதில் என்ன தவறு இருக்க முடியும்!

வெள்ளைக்காரன் காலத்தில் அரிசி என்ன விலை விற்றது—எட்டணா! இப்போது என்ன விலை விற்கிறது—ஒரு ரூபாய் எட்டணா! என்றாலும் காங்கிரஸ் கட்சி தான் நாடாண்டு வருகிறது! காரணம் என்ன? அவர்கள் நினைப்பது தானே?

வெள்ளைக்காரன் காலத்தில் நாலணா விற்ற புளி இப்போது இரண்டு ரூபாய்!

வெள்ளைக்காரன் காலத்தில் ஒரு ரூபாய் விற்ற மிளகாய் இப்போது நான்கு ரூபாய்!

வெள்ளைக்காரன் காலத்தில் ஒரு வேட்டி இரண்டு ரூபாய்-இப்போது எட்டு ரூபாய்!

வெள்ளைக்காரன் காலத்தில் ஒரு புடவை ஐந்து ரூபாய்—இப்போது இருபது ரூபாய்! என்றாலும காங்கிரஸ் கட்சி தான் நாட்டை ஆண்டு வருகிறது! காரணம் என்ன? அவர்கள் நினைப்பது போல் நமக்கு பகுத்துணர்ந்துப் பார்க்கும் சக்தி இல்லையா?

சுதந்திரம் பெற்ற பின்பு நாடு வறுமைக் காடாகி விட்டது—நாட்டு மக்கள் வாழ வழியின்றி, சாவின் விளிம்பிலே புலம்பிக் கொண்டிருக்கிறார்கள்!

என்றாலும் காங்கிரஸ் கட்சி தான் நாடாண்டு வருகிறது! பதின்மூன்று ஆண்டுகளாக, தொடர்ந்தாற் போல் காங்கிரஸ் தியாகிகள் தான் ஆட்சி பீடத்தில் அமர்ந்து பரிபாலனம் செய்து வருகிறார்கள்! என்ன காரணம்?

அமைச்சர்கள் மீதோ, காங்கிரஸ் கட்சியின் மீதோ நாம் குற்றம் சாட்டி பயனில்லை! குற்றம் நம்முடையது தான், நம மக்களுடையது தான்!

அமைச்சர்கள் எதைச் செய்தாலும், எந்த அநீதியை விளைவித்தாலும் நாம் உணர்ந்து பார்க்காமல், தட்டிக் கேட்காமல் வாய்மூடி மௌனிகளாக இருந்த காரணத்தால் தான் நாம இன்று தவிக்கிறோம்! "சோறு, சோறு" என்று தெருத் தெருவாகப் பிச்சை எடுத்து அலைகிறோம்! அமைச்சர்களோ, "நம்மை ஏமாளிகள், இளித்த வாயர்கள் என்று எண்ணி நாட்டையும், நம் வாழ்வையும் சீர்குலைத்து வருகின்றார்கள்!

"நாம் மனிதர்கள் தான், நமக்குப் பகுத்துணர்ந்துப் பார்க்கும் சக்தியுண்டு" என்பதை அமைச்சர்களுக்குக் காட்டுவோமானால் நிச்சயமாக அவர்கள் தங்கள் தவறுகளைத் திருத்திக் கொள்ளுவார்கள்!

இந்த சந்தர்ப்பம் இன்னும் இரண்டே இரண்டு ஆண்டில் உங்களுக்குக் கிடைக்க இருக்கிறது! அந்த நேரத்தில் விழித்துக் கொண்டு—"நாங்கள் மனிதர்கள் தான்" என்பதை காட்டுவீர்களானால் நாட்டில் நல்வாழ்வு மலரும்!

1962ல் வர இருக்கின்ற பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு நல்ல பாடம் கற்பித்தால் உங்களை நிச்சயமாக மனிதர்கள் என்றே எண்ணுவார்கள்! இல்லை என்றால் அவர்களுடைய சர்வாதிகாரம் தொடரும்—அதனால் நாடும் அழியும், நாமும் அழிவோம்!

இந்தியை எதிர்த்து, பிரமாண்டமானப் போராட்டம் நடத்த வேண்டும்!

போர்க் கொடியை உயர்த்துங்கள்! புரட்சிப் பண்பாடி வாருங்கள்!

இந்தி வெறியர்கள் கூச்சல் போட்டார்கள்! அகில உலகத் தலைவரோ கொடுத்த வாக்குறுதியை மறந்து மௌனம் சாதித்தார்?

அவரை எப்படிப் பாராட்டுவேன்? அவரை எப்படி ஆண்மகன் என்று நினைப்பேன்?

சென்னையில் சம்பத் எழுப்புள் வீர கர்ஜனை!



வண்ணை, கே. எஸ். பாண்டியன் இரவுப்பள்ளி ஆண்டுவிழா சென்ற 12-5-60ம்தேதி வண்ணை கல்லறை மைதானத்தில் தோழர் பி. இராமசாமி தலைமையில் மிக சிறும், சிறப்புடன் நடைபெற்றது. இக்கூட்டத்தில் டெல்லி மக்கள் சபையின் உறுப்பினரும். திராவிட முன்னேற்றக் கழக தலைவர்களில் ஒருவருமான சொல்லின் செல்வர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன் சென்னை இராயபுரம் காசிநகர் புரட்சி நடிகர் எம். ஜி ராமச்சந்திரன் நினைவு மன்றத்திலிருந்து ஒரு மாபெரும் ஊர்வலம் புறப்பட்டது.

இந்த ஊர்வலத்தில் சொல்லின் செல்வர் சம்பத் அவர்களும் கலந்து கொண்டார்.

சொல்லின் சொல்வரை அலங்கரிக்கப்பட்ட ஒரு வாகனத்தில் அமர வைத்திருந்தார்கள்,

சொல்லின் செல்வரை சம்பத் ஊர்வலமாக வரும் தெருக்களிலெல்லாம் அலங்கார வளைவுகளும், வரவேற்புத் தட்டிகளும் கட்டப்பட்டிருந்தன. ஊர்வலத்தில் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டார்கள்.

கூட்டம் ஆரம்பிப்பதற்குமுன் இயக்கத் தோழர்கள் பலர் இயக்கப்பாடல்களை பாடினார்கள் மாணவி சற்குணம், தோழர் எஸ். பி. டி. திராவிட மணி, ம. ரா. தேவராசன் ஆகியோர்கள் பேசினார்கள்.

பின் சொல்லின் செல்வர் ஈ. வி. கே. சம்பத் பெருத்த கை ஒலிகளுக்கிடையே பேசியதாவது:—

அன்புள்ள தலைவர் அவர்களே! அருமை நண்பர்களே! மதிப்பிற்குரிய தாய்மார்களே! பெரியோர்களே!

இன்று இங்கு நடைபெறும், இந்த மாபெரும், பொதுக் கூட்டத்தில், நான் கலந்து கொண்டு பேசும் வாய்ப்பினை நல்கிய இந்த மன்றத்தாருக்கு எனது உளம் கலந்த நன்றியையும், வணக்கத்தையும், தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இங்கு நடைபெறும் இக்கூட்டம் நமது இயக்கத்திற்காக தனது இன்னுயிரை தியாகம் செய்த மாவீரன் கே. எஸ். பாண்டியன் நினைவு மன்றத்தின் சார்பில் நடைபெறுகிறது இது மிகவும் மகிழ்ச்சி யுடையதாகும,

இன்று மாலை ஒரு மாபெரும் ஊர்வலம் நடத்தினீர்கள். அதில் கலந்து கொண்ட ஏராளமான மக்களைப் பார்த்ததும் மிகவும் அகமகிழ்ந்தேன்.

இப்போது இங்கு பல மன்றங்கள் தங்களது அன்பைச் செலுத்தும் முறையில் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அன்பளிப்பாக அளித்தார்கள். இன்னும் ஒரு அன்பர் பற்பொடியை அளித்தார். இது அளவுக்கு மிஞ்சிய அன்பைக் காட்டுவதாகும். இன்னொரு ஊரில் எனக்கு பிஸ் கோத்தும், சாக்லெட்டும் கொடுத்தார்கள். மேடையில் அன்பளிப்பதற்கு நாம் ஒரு முறை வகுக்க வேண்டும். இப்போது அன்பளிப்பு அளிக்கின்ற முறையால் நிகழ்ச்சியே தாமதமாகும் நிலையேற்படுமோ என்று தோன்றிற்று இதற்கெல்லாம் ஒரு முறையை வகுத்து கூட்ட நிகழ்ச்சிகளுக்குத் தடையேற்படாத வண்ணம் நல்விதி முறையை கொள்ள வேண்டும். அன்பிற்கும் ஆர்வத்திற்கும் ஒரு அர்த்தமிருக்க வேண்டும்

இங்கு நாம் மிக்க மகிழ்ச்சியோடும், ஆரவாரத்தோடும் உற்சாகமான முறையில் இன்று கூட்டத்தை நடத்துகிறோம். இந்த உற்சாகமும், மகிழ்ச்சியும், கொள்வதற்கு உகந்த நேரமா இது? இந்த மாதிரி, களியாட்டமும், வேடிக்கையும், இப்போதுதேவைதானா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்று நாம் பயங்கரமான சூழ் நிலையில் சிக்கி இருக்கிறோம். நம்மைச் சுற்றிலும் பெரும், பெரும் ஆபத்துக்கள் நமக்கு வந்து கொண்டு இருக்கின்றன.

டெல்லியிலிருந்து வரும் செய்திகளைப் பார்க்கும்போது நமக்கு நேரப் போகும், ஆபத்துக்களையும், பயரங்கர நிலைமைகளையும், ஒரு கணம் எண்ணிப் பார்த்தால் நாம் இப்படி களியாட்டங்களில் ஈடுபடுவோமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

டெல்லி ஏகாதிபத்திய வெறியர்களும், இந்தி வெறியர்களும், நம்மையும், நமது நாட்டையும் அழிப்பதற்கான சதித் திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவசர அவசரமாக இந்தியைப் புகுத்துவதற்கான சதி திட்டங்களை வகுத்துக் கொண்டு, அதற்கான வழிவகைகளைச் செய்து கொண்டு வருகிறார்கள். நாம் அதைத் தடுத்து நிறுத்தா விட்டால் அந்தப் போக்கை மாற்று விட்டால் நம்முடைய எதிர்காலம் பயங்கரமான நிலைக்கு வந்து சேரும்.

நாம் உடனே போர்க் குரல் எழுப்ப வேண்டும். நம்முடைய வலிவை, உணர்ச்சியை வடவர்கள் காணும்படியான—உணர்ந்து கொள்ளும்படியான நிலைமையை நாம் உண்டாக்க வேண்டும். நமக்கு இப்போது ஊர்வலங்களும் மகிழ்ச்சிக் களியாட்டங்களும் தேவையில்லை. நமக்கு இப்போது தேவையானது போராட்ட அணிவகுப்பேயாகும்,

இந்தியக் குடியரசு தலைவர் பாபு ராஜேந்திரப்பிரசாத் இந்தியை ஆட்சி மொழியாக்கி விட்டதாக தமது கையெழுத்திட்டு அறிக்கையை அனுப்பி விட்டார். அதைப் பார்த்து நாம இன்னும் சாதுக்களாகவே இருந்து வருகிறோம். நம் உள்ளத்தில் ஓர் துடிதுடிப்பும். விறு விறுப்பும் ஏற்படவில்லை. அப்படி ஏற்படுவதற்கான முறைகளை நமது

(4-பக்கம் பார்க்க)

நமது மந்திரிகள்

காட்டிக் கொடுப்பவர்கள், துரோகிகள், வஞ்சகர்கள். சூழ்ச்சிக்காரர்கள் !

(சம்பத் பேச்சு)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேற்றக் கழகம் செய்தே தீர வேண்டும்.

இப்போது நமக்கு வந்திருக்கும், ஆபத்தை—பயங்கரத்தை முன்னேற்றக் கழகம் ஒன்றுல் தான்போக்க முடியும். அதையே தான் மக்கள் எதிர்பார்க்கிருர்கள்.

இந்திய சர்க்காரின் உள்நாட்டமைச்சர் பண்டித கோவிந்த வல்லபபந்த் இந்திய சர்க்காரின் அமைச்சர்களுக்கெல்லாம் அவசரம் அவசரமாக அழைப்புகள் அனுப்பி அழைத்திருக்கிருர். சுற்றுப்பிரயாணத்திலுள்ள அமைச்சர்களையும் உடனே வரும்படி அழைத்திருக்கிருர். இந்திய சர்க்காரின் பாதுகாப்பு அமைச்சர் வி. கே. கிருஷ்ணமேனன் இராணுவத் தளங்கள் இருக்கும் பகுதிகளில் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அவரையும் அமைச்சர் பந்த் அழைத்திருக்கிருர். ஏன் அழைத்திருக்கிருர். இந்திய எல்லையில் சைனாக்காரர்கள் படை குவிந்திருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக நமது பாதுகாப்புப் படைகளைப் பெருக்குவதற்காக அல்ல பின் ஏன்? இராணுவ காரியங்களிலெல்லாம் இனி எல்லா உத்திரவுகளையும் இந்தியிலேயே இருக்க வேண்டுமென்பதற்காக அதைப் பற்றி வற்புறுத்தி உத்திரவு போடுவதற்காகவே அழைத்திருக்கிருர் மற்றும் கல்வி இலாகாவிலும் விஞ்ஞான துறையிலும், கலாச்சாரப் பகுதிகளிலும், மற்றும் ஏனைய துறைகளிலும் இந்தியைப் புகுத்துவதற்கான வழியைச் செய்வதற்காகவே அழைத்திருக்கிருர். டில்லி அரசினர் இப்பொழுதே இந்தியைப் புகுத்திட பரபரப்பாகவும், வேகம் வேகமாகவும் காரியங்களைச் செய்து வருகிருர்கள். இதற்கு நாம் ஏதாவது செய்ய வேண்டாமா? இந்த நிலை ஏற்பட்டால் நமது எதிர்காலம் என்னவாகும் நமது பிற்கால சந்ததியார்கள் நம்மை கையாலாகாதவர்கள், காட்டிக் கொடுத்தவர்கள், துரோகிகள் என்று தூற்றும் நிலைக்கு நாம் ஆளாகக் கூடாது.

இங்கு நமக்கு அமைச்சர்களாக இருக்கிறார்களே சூரர்கள், வீராதி வீரர்கள் இவர்கள் இந்தி வருவதைப் பற்றி ஒரு சிறிதும் கவலை கொள்ளவில்லை. வட நாட்டு அரசினர் இந்தி புகுத்துவதைப் பற்றி இவர்களிடம் ஒன்றும் கேட்கவில்லை. இவர்களை அவர்கள் மதிக்கவே இல்லை. இவர்களை அழைத்து உத்திரவு போட வேண்டியதில்லை. கொஞ்சம் ஜாடையாகப் பேசினாலேயே உணர்ந்து பணிந்து போவார்கள் என்று டில்லியிலுள்ளவர்களுக்குத் தெரியும் இவர்கள் டில்லியின் அடிமைகள் என்று அவர்களுக்குத் தெரியும் அதனாலேயே எதையும் இவர்களைக் கேட்க வேண்டுமென்று டில்லியில் இருப்பவர்கள் நினைப்பதில்லை.

சமீபத்தில் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் பேசும் போது எப்படியும் இந்தி வந்தே தீரும் என்று பேசி இருக்கிருர். இங்குள்ள அமைச்சர்கள் இதுவரை தாங்கள் தமிழுக்குப் பாடுபடுபவர்களாகவும், தமிழை ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டிருப்பதாகவும் பெருமையடித்துப் பேசி வந்தார்கள், இப்போது அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டு டில்லி சர்க்காரின்—இந்தி வெறியர்களின் அடிமைகளாக இருந்து வருகிருர்கள்,

இவர்களை நாம் தமிழ் நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்கள், தமிழின் துரோகிகள் என்பதை மக்கள் உணரும்படி செய்ய வேண்டும்.

நாம் இந்தியை எதிர்க்கிறோம். இந்தி வந்தால் தென்னகத்திலுள்ளவர்கள் ஏற்க மாட்டார்கள். எந்தவித தியாகம் செய்தேனும் அதைப் புக விடாது தடுப்பார்கள் என்ற நமது போர்க்குரல் டில்லிக்கு எட்டும்படி செய்ய வேண்டும் அதை நாம் இன்னும் செய்யவில்லை. நமது எதிர்ப்புக் குரல் டில்லியிலுள்ளவர்களுக்குக் கேட்கவில்லை.

நாம் இந்தியை எதிர்த்து மேடைகளில் வீரமாகப் பேசுவதால் மட்டும், தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பி விடுவதால் மட்டும் இந்தியை எதிர்த்தவர்களாகி விட மாட்டோம். நாம் எதிர்க்கின்ற குரல் வெறும் பேச்சுக் குரல் என்று டில்லி வெறியர்கள் நினைக்கக் கூடாது. அது நமது போர்க் குரல் என்று அவர்கள் எண்ண வேண்டும். நாமும் நமது குரல்களைப் போர் குரல்களாகவே மாற்றிக் கொள்ளவேண்டும். நாம் அப்படி செய்தால் தான் அரசியல் உரிமைகளைப் பெற முடியும், டில்லி ஏகாதிபத்திய வெறியையும் ஓட்ட முடியும்.

இன்று நாம் தாளமுத்து நடராசன் தியாகங்களைப் பற்றி பேசி மகிழ்கிறோம். அவர்கள் இந்தியை எதிர்த்து உயிரைத் தத்தம் செய்ததைப் போற்றிப் பேசுகிறோம் இதனால் நமது கடமைகள் தீர்ந்து விடவில்லை. தாளமுத்து நடராசன் தான் போராட்டத்தின் கடைசி பரம்பரை என்று நாம் நினைத்து விடக் கூடாது, அவர்கள் நமக்கு முன்னோடியாக இருந்தார்கள். அவர்கள் செய்த தியாகத்தை வைத்து நாம் போராட்டத்தில் இறங்க வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு விடுதலை இயக்கம் அது விடுதலை வீரர்களின் படைத்தளம் விடுதலை வீரர்கள் நமது கழகத்தை போராட்ட அமைப்பாக எண்ண வேண்டும்.

சட்டமன்றத்திற்கும், மக்கள் சபைக்கும் போவதுதான் நமது நோக்கமென்று நாம் எண்ணக் கூடாது. நமது முக்கிய நோக்கங்களில் அதுவுமொன்று. நமக்கு அங்கு செல்வதற்கான வாய்ப்புகளும், வசதிகளும் ஏற்பட்டால் அங்கும் செல்வோம். எங்களாலும் ஆட்சி செய்வதற்கு முடியும் என்பதைக் காட்டுவதற்கே அங்கு செல்கிறோம். அங்கு போக முடியாத ஒருஅற்புத இடமல்ல அதுஎன்பதைக் காட்டுவதற்கேச் செல்கிறோம். ஆனல் அதையே முக்கியமாகக் கருதி நமது முக்கியமான நோக்கத்தை மறந்து விடக் கூடாது. நமது நாடு விடுதலை பெறுவதற்கான விடுதலைப் போராட்டத்தில் நாம் ஈடுபட வேண்டும்.

நாம் முன்பு இந்தியை எதிர்த்துப் பெரும் போராட்டத்தை நடத்தினேம். ரயில் வேக்களிலுள்ள இந்தி எழுத்துக்களை அழித்தோம் அதை இப்போது கூறிக் கொண்டிருக்கக் கூடாது. அது பழமையானது இப்போது வந்திருக்கும் ஆபத்தை நீக்க நாம் மிகவும் கடுமையாகப் போராட வேண்டும். அதற்கு நாம் தயாராக வேண்டும்.

நம்மைத் தவிர வேறு யாரும் இந்தப் பணியில் ஈடுபட மாட்டார்கள். நமது கழகம் ஒன்றுதான் இன்றுவந்துள்ள ஆபத்தை நீக்க முடியும்.

இந்தி ஆதிக்கத்தை டில்லியிலுள்ளோர் வெகு வேகமாக நிலை நிறுத்த முற்பட்டு விட்டார்கள் இதைக் கண்டு மக்கள் மிகவும் சஞ்சலப்படுகிருர்கள். நாம் இந்தியை எதிர்த்து போராடுவோமா என்ற அச்ச நிலைக்கு வந்திருக்கிருர்கள்! அந்த எண்ணத்தைப் போக்க இப்போதே முற்பட வேண்டும்.

மந்திரி சுப்பிரமணியத்திற்கும் நம்மிடம் இருந்த பயம் நீங்கி விட்டது. நாம் இந்தியை எதிர்த்துப் போராட மாட்டோம் என்று எண்ணி நம்மை எதிர்க்க முற்பட்டு விட்டார். அவருக்கு நமது திறமையை, நமது வலிவைக் காட்ட நாம் போராட்டத்தில் ஈடுபட வேண்டும்.

இந்தியக் குடியரசுத் தலைவர் ராஜேந்திரப்பிரசாத் அறிக்கை வந்ததும். இந்தி வெறியர்கள் இந்தியை எங்கெங்கு எந்தெந்த விதத்தில், எப்படி, எப்படி புகுத்துவது என்பதை காரியத்தில் செய்ய முற்பட்டு விட்டார்கள். இந்தி கட்டாயம் இல்லை என்று கூறிக்கொண்டே பள்ளியிலும், அரசாங்க அலுவலகங்களிலும், மற்றும் பல நிலையங்களிலும் இந்தியைப் புகுத்த ஆரம்பித்து விட்டார்கள். ரயில்வேக்களிலும், அஞ்சல் நிலையங்களிலும் பணியாற்றுகின்றவர்கள் இந்தியைப் படிக்க வேண்டிய நிலைக்கு வந்து விட்டார்கள். அவர்கள் தங்களது வேலையைக் காப்பாற்றிக் கொள்ளவும், தங்களது சம்பள உயர்வைப் பெறுவதற்கும் அவர்கள் படிப்பது தான் நல்லது என்ற முடிவுக்கு வந்து விட்டார்கள். நாம் இந்தியை எதிர்த்துப் போராட மாட்டோம் என்ற பயம் அவர்களுக்கு வந்து விட்டது.

பிள்ளைகளைப் படிக்க வைக்கும் தாய் தந்தையர்களும், தங்களது பிள்ளைகளை இந்தியைக் கற்றுக் கொள்ள விடக் கூடாதென நினைத்த தமிழ் பற்றுள்ள தாய் தந்தையர்களும், தங்களது பிள்ளைகள் இந்தி படித்தால் தான் மார்க்குகள் கிடைக்கும், பரிட்சையில் தேற முடியும். என்றெண்ணி இந்தியைப் படிக்க வைக்க முற்பட்டு விட்டார்கள்.

அகில இந்திய வானொலி நிலையத்தில் முன்பெல்லாம் வெறும் இந்தி எழுத்துக்களே இருந்து வந்தது இப்போது எல்லாமே இந்தியாகி விட்டது.

சர்க்கார் நிலையங்களில் பணியாற்றுகிறவர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பி விட்டார்கள். இதைக் கண்டு மக்களெல்லாம் மனநிம்மதியற்று சோர்வடைந்து விட்டார்கள். இனி நாம் வாளா இருக்க கூடாது. நமது கைகளைக் கட்டிக் கொண்டிருக்கக் கூடாது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இயற்கையாக இருந்து வரும் போர்க்குணம் மாறவில்லை. அது இன்னும் இருக்கிறது. அதை உடனே செய்கையில் செய்ய வேண்டும். அப்படிச் செய்யும் போராட்டம் பயங்கர போராட்டமாக இருக்க வேண்டும்.

நமது மாநில அமைச்சர்கள் மிகவும் சூழ்ச்சியும், சூதும் நிறைந்தவர்கள். அவர்கள் செய்கை வஞ்சகம் நிறைந்திருக்கிறது.

நமது நிதியமைச்சர் சுப்பிரமணியம் தமிழை ஆட்சி மொழியாக்க போகிறோம். ஆங்கிலம் இருந்த இடத்தில் தமிழைப் புகுத்தப் போகிறோம் என்று கூறினர். இதைக் கேட்டு நாம் அகமகிழ்ந்தோம். நமது உள்ளம் மெல்லாம் பூரிப்படைந்தது.

நாம் எவரெவருக்குத் தமிழ் உணர்ச்சி வரவேண்டுமென்று நினைத்தோமோ, எவரெவர் உள்ளத்தில் தமிழ் ஆர்வம் பொங்க வேண்டுமென்று நினைத்தோமோ அங்கெல்லாம் உண்டாகி விட்டதைக் கண்டு மன மகிழ்ச்சியடைந்தோம்.

ஆனல் நிதியமைச்சர் சுப்பிரமணியம் கூறிய மொழிகள், அவரது வார்த்தைகள் சூழ்ச்சி நிறைந்தது, சூது நிறைந்தது என்பதை காட்டுகிறது.

இந்த வார்த்தை போகிறது என்று சொல்லுகிருர். அப்படியானல் ஆங்கிலம் இருந்த இடத்தில் தமிழ் இருக்கும் என்ற எண்ணம் மாறி இந்தி வரப்போகிறது என்ற ஒரு சூன்யத்தை உண்டாக்கப் போகிருர்கள் என்று தெரிகிறது. இந்த மாதிரி அமைச்சர்கள் கூறி ஏமாற்று நாடகம் நடிப்பதை நாம் எச்சரிக்கையாகக் கவனிக்க வேண்டும் இவர்களின் இந்த துரோகச் செயல்களை மக்கள் உணரும்படி செய்வதுடன், அவர்

(9ம் பக்கம் பார்க்க)

கோடிக்கணக்கான மக்கள் என்னை 'அண்ணா' என்று அழைக்கிறார்கள்!

இதைவிட பெருமை வேறு என்ன வேண்டும்!

மாற்றார் நம்மைத் தூற்றுவதைப்பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்!

சொறி சிறங்கு பிடித்த நிலையில் காங்கிரஸ் இருக்கிறது!

சென்னையில் அறிஞர் அண்ணா முழக்கம்!

சென்னை திருவல்லிக்கேணி 58-வது வட்டம் அண்ணாப் படிப்பகத்தின் நான்காம் ஆண்டு விழா ஜாம்பஜார் ஜானிபாட்சா தெருவில் திரு. சாரங்கபாணி தலைமையில் நடைபெற்றது. செயலாளர் நான்காண்டுகளில் படிப்பகம் செய்த பணிகளை எடுத்துரைத்தார். பின் திருவாளர்கள் பாண்டியன், காளிமுத்து, வடிவேலு, ந. சுந்தரம் எம். கே. சாமி ஆகியோர் பேசிய பின் வட்டத்து நகர மன்ற உறுப்பினர் திரு. சிட்டிபாபு அவர்கள் நகரமன்றத்தில் தாம் செய்த பணிகளை விவரித்துக் கூறினார். மாற்றுக் கட்சியினர் தாக்கி வருவதைப் பற்றியும், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன் காங்கிரசார் செய்த ஊழல்களைப் பற்றியும் மிகவும் விபரமாக விளக்கினார்.

பின் அறிஞர் அண்ணா அவர்கள் பேச எழுந்தார். பல மன்றங்களின் சார்பில் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் சூட்டப்பட்டது.

அண்ணா அவர்கள் பல குழந்தைகளுக்குப் பெயர் சூட்டினார்.

பின் நீண்ட கை ஒலிகளுக்கிடையேயும், பலத்த ஆரவாரத்திற்கிடையேயும் அறிஞர் அண்ணா அவர்கள் பேசியதாவது.

அன்புள்ள தலைவர் அவர்களே, நண்பர்களே, தாய்மார்களே, பெரியோர்களே!

இன்று இந்த மன்றத்தின் ஆண்டு விழாவில் கலந்து உங்களையெல்லாம் சந்திக்கும் வாய்ப்பினை நல்கிய இந்த மன்றத்தாருக்கும், இந்த வட்டத்து நகர மன்ற உறுப்பினர் நண்பர் சிட்டிபாபு அவர்களுக்கும் என அன்புகலந்த நன்றியையும் வணக்கத்தையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இந்தக் கூட்டத்திற்கு வந்து கொண்டிருக்கும் போது நமது சிட்டிபாபு பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டு வந்தேன்.

நகர மன்றத்தில் நமது கழகம் ஆற்றிய நல்ல பல பணிகளைப் பற்றியும். அங்கு செய்துள்ள பல திட்டங்களைப் பற்றியும் அதை நிறைவேற்ற துரைத்தனத்தார் செய்யும் முட்டுக் கட்டைகளைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தார். மற்றும் அவர் பேசும் போது மாற்றுக் கட்சிகாரர்களுக்கும் கட்சி பேதமின்றி தன்னாலான பணிகளைச் செய்வதாகவும் கூறினார். இதைக் கேட்டு நான் புளகாங்கிதமடைந்தேன்.

சென்னை மாநகராட்சி மன்றத்தில் நமது கழகம் நிர்வாகப் பொறுப்பையேற்று 'எல்லா மக்களுக்கும் அரசியல் கண்ணோட்டமின்றி, கட்சி மாறுபாடின்றி எல்லோருடைய குறைபாடுகளையும் நீக்க பணியாற்ற வேண்டும். இந்த நல்லெண்ணம் நன்றாக வளர வேண்டும்.

மாற்றுக் கட்சியினரின் தாக்குதலைப் பற்றிக் கூறாது நாம் செய்து வரும் பணிகளை மக்களிடம் கூற வேண்டும்.

காங்கிரசுக்காரர்கள் நகர மன்றத்தில் நமதுகழகம் செய்து வரும் பணிகளை இழித்துப் பழித்து பேசுகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். பழிக்கட்டும் குறை கூறட்டும் நீங்கள் மக்களுக்குச் செய்ய வேண்டியதை– உங்கள் பணிகளில் குறைகாண முடியாதபடி பணியாற்றுங்கள்.

அவர்கள் என்ன சொல்வார்கள் சிட்டிபாபு, தாடி வைத்திருக்கிறார். சலூனில் சவரம் செய்யவில்லை என்றும், மற்றும் தனிப்பட்ட முறையில் ஏதாவது கூறிக் கொண்டிருப்பார்கள். அதற்கெல்லாம் நாம் பதில் கூறிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. அரசியல் கொள்கைகளைப் பற்றி குறை கூறினால் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டும், அதற்குப் பதில் சொல்ல வேண்டும், மற்றபடி கூறும் குறைகளைப் பற்றி நீங்கள் ஏன் . உங்கள் கவனத்தைச் செலுத்துகிறீர்கள்.

கிராமங்களில் தாய்மார்கள் காலையில் எழுந்தவுடன் கோலம் போடுவார்கள். ஆனால் சென்னை நகரில் இப்போதெல்லாம் தாய்மார்கள் வீட்டின் முன் கோலம் போடுவதில்லை. கிராமங்களில் தான் அதிகமாகத் தாய்மார்கள் கோலம் போடுவது வழக்கம் அதனால் தான் நான் கிராமத்தைப் பற்றிக் கூறுகிறேன்.

அந்த முறைப்படி ஒரு பெண் தனது வீட்டின் முன் கோலம் போட்டுக் கொண்டிருக்கிறார். அந்தப் பெண் தனது திறமையையும்! சாமர்த்தியத்தையும் காட்ட வேண்டுமென்பதற்காகவும், மற்ற பெண்கள் தான் போடும் கோலத்தைப் பார்த்து மகிழ வேண்டுமென்பதற்காகவும் நல்ல முறையில் கோலம் போட்டுக் கொண்டிருக்கிறார். இதை அக்கம் பக்கத்துப் பெண்கள், ஆறு, எழு பெண்கள் வந்து வேடிக்கை பார்க்கிறார்கள். அப்படி பார்க்கும் அவர்களில் ஒரு அம்மையார் கூறுவார் இந்த மாதிரி இத்தனை பொட்டுகள் வைத்தால் நன்றாக இருக்காது எட்டுப் பொட்டுகள் இருக்க வேண்டுமென்று சொல்வார். இன்னொரு அம்மையார் ஆறு பொட்டுகள் போட்டால் நன்றாக இருக்குமென்று சொல்வார். மற்றொருவர் ஏழு பொட்டு போட்டால் அழகாக இருக்குமென்று கூறுவார். இப்படி கூடியிருக்கிறவர்களெல்லாம் கூறுகின்றபடி கோலம் போட்டுக் கொண்டிருக்கும் அம்மையார் கோலத்தை மாற்றி, மாற்றி போட்டுக் கொண்டிருந்தால் கோலத்தில் அழகு இருக்குமா? கோலம் போட்ட போது இருந்த அழகு இருக்குமா?

அதுபோல் தான் ஒரு அரசியல் கட்சியும் குறை சொல்லிக்கொண்டிருப்பவர்க்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருந்தால் நாம் ஈடுபட்டுள்ள பணியைச் சரிவர செய்ய முடியாது. நாம் சொல்லி வரும் "திராவிடநாடு திராவிடருக்கே" என்ற மூல மந்திரத்தை பற்றி நாம் கொண்டிருக்கும் ஆர்வம், அதை நாம் அடையச் செய்து வரும் முயற்சிகள் எல்லாம் தடைப்படும் நம்முடைய முக்கியமான பணி நமது இலட்சியம் நிறைவேறுவது அதில் நமக்கு நீங்காத பற்றும், அதற்காக நமக்கிருக்க வேண்டிய–கடமை உணர்ச்சியுந்தான் மாற்றார்கள் பேசி வரும் குறைகளைக் கவனிப்பதோ, அதற்குப் பதில் கூறிக் கொண்டிருப்பதோ நமது பணியல்ல அது நமக்குத் தேவையுமில்லை

இன்று காங்கிரஸ் காரர்கள் நிலை சொறிசிறங்கு பிடித்தவனுக்குள்ள நிலை ஏற்பட்டிருக்கிறது காங்கிரஸ் அழுக்குப் பிடித்த நிலைக்கு இன்று வந்திருக்கிறது

சொரி சிறங்கு பிடித்தவன் எந்த நேரமும், எப்பொழுதும் சொரிந்து கொண்டே இருப்பான். எவ்வளவு பெரிய ஆபத்துவரும் நேரமாக இருந்தாலும் சரி, எதிரி கத்தியைக் கொண்டு குத்துவதற்கோ வாள்கொண்டு தாக்குவதற்கோ வருகின்ற நேரமாக இருந்தாலும் அப்பொழுதும் சொரிந்து கொண்டே தான் இருப்பான் அது போன்று தான் காங்கிரசும், செய்கிறது, நாம் அந்த பாதைக்குப் போகக் கூடாது அப்படி போவது மிகவும் மோசமானது வெளி நாட்டிலிருந்து யாராவ்து நமது நாட்டுக்குயாராவது வந்து பார்த்தால்இந்த நாட்டின் அரசியலே இப்படித்தான் போலிருக்கிறது. இங்குள்ளவர்கள் அனைவரும் சொரி சிறங்கு பிடித்தவர்கள் போலிருக்கிறது என்று நினைப்பார்கள்

ஆகவே அந்த நிலைக்கு நம்மையும் ஈடுபடுத்தாமல் நகர மன்றத்தில் இப்பொழுது பணியாற்றி வருவது போன்று மக்களுக்குப் பணியாற்றிவர வேண்டும் மாற்றுக் கட்சியைச் சார்ந்தவராயினும் அவர்களுக்கும் நாம் நமது பணியைச் செய்யவேண்டும். இதனால் நமக்கும் நமது கழகத்திற்கும் நற்பெயர் ஏற்படும்படி பணியாற்றி வரவேண்டும்

இன்று அரசியல் நிலை மிக விறுவிறுப்படைந்து இருக்கிறது. அதற்குக் காரணம் நாம் வலுவடைந்து நமது கழகம் வளர்ச்சியடைந்திருப்பதே அதற்கு முக்கிய காரணம் நாம் வளர வளர நமக்கு எதிர்ப்பு வளர்ந்து கொண்டுதான் வரும் நாம் அந்த எதிர்ப்பை கவனியாது நமது வளர்ச்சியையே தான் கருதி பணியாற்ற வேண்டும்

நான் ஓரிரண்டாண்டு முன் சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசியிருப்பதாக எனக்கு நினைவிருக்கிறது. அங்கு பேசும் போது கூறியிருக்கிறேன்.

'தமிழ் நாட்டில் அரசியல் சூடான நிலையில் இல்லை சத்தற்ற நிலையில் அரசியல் இருக்கிறது" என்று.

அந்த நிலை இப்போது மாற்றமடைந்து விட்டது. நாம் ஒரு கூட்டம் நடத்தினால் காங்கிரசார் ஓர் கூட்டம் நடத்துகிறார்கள். அது போன்று மற்ற கட்சியினரும் அடுத்தடுத்து கூட்டம் நடத்துகிறார்கள்.

நான் இன்னும் உறுதியாகவே கூறுவேன் இந்த மாதிரி கூட்டங்கள் அதிகமாக நடத்துவது நமது தமிழகத்தில் தான்!

இந்தியாவின் எந்தப் பகுதியிலும் இது போன்று கூட்டங்கள் அதிகமாக நடைபெறுவதே இல்லை ஆந்திராவில் மட்டும் சில இடங்களில் கூட்டங்கள் நடைபெற்று வருகிறது. கேரள மாநிலத்தில் கூட்டங்கள்நடைபெறுவதே கிடையாது. வடநாட்டில் கூட்டங்கள் கூட்டிப் பிரச்சாரங்களே செய்வதில்லை அவர்கள் தேர்தல் நேரங்களில் அவர்களுக்குத் தேவையான காரியங்களைப் பார்த்துக் கொண்டுபோய் வடுவார்கள்

நம்முடைய தமிழகத்தில் எல்லா அரசியல் கட்சிகளும் தாராளமாக—எந்த வித தடையுமின்றி கூட்டங்கள் நடத்துகின்றன தங்களது திட்டங்களை மக்களுக்கு எடுத்துக் கூறி வருவதுடன் தாங்கள் நாட்டிற்டிச் செய்த பணிகளையும், நாட்டுமக்களுக்கு இருந்து வரும் குறைபாடுகளையும் அதை களைவதற்கு செய்து வரும் காரியங்களையும் கூறி வருகிறார்கள் அரசியல் நாகரீகத்தைப்பற்றியும் அரசி

(8-ம் பக்கம் பார்க்க)

3

மோகனப் புன்னகை

இறுதி ஆண்டுத் தேர்வு நெருங்க, நெருங்க சலனமற்றுக் கிடந்த சாந்தாவின் உள்ளத்தில் சஞ்சலமும், கவலையும், குடி கொண்டு மனதை வாட்ட ஆரம்பித்தன! நம்முடைய எதிர் காலம் எப்படி இருக்குமோ, முதல் தோல்வி முற்றிலும் தோல்வியாகி விட்டால...? சேச் சே, அப்படி ஒன்றும் இருக்காது! இருளுக்குப்பின் தானே ஒளி!

"படிப்பை முடித்து விட்டு எங்கேயாவது ஒரு கிராமத்திற்குச் சென்று வேலை பார்த்தால் போகிறது! பட்டிணத்து வாழ்க்கையை விட்டு விட்டு பட்டிக் காட்டு வாழ்க்கையை எப்படி மேற்கொள்ள முடியும்! அல்லது அப்பா சொல்லுகிறபடி சமூக சேவையில் ஈடுபட்டு பொதுத் தொண்டு புரியலாமா பொதுத் தொண்டு — என்ன பொதுத் தொண்டு வேண்டியிருக்கிறது! படிப்பு வாசனையே இல்லாத காட்டு மிராண்டிகளிடம் எப்படித் தான் பழக முடியும்! பணம் இருக்கிறது! அந்தஸ்து இருக்கிறது, ஊரில பெரும் செல்வாக்கு இருக்கிறது என்ன பயன்? சாந்தா கவலைக் கடலில் மூழ்கி, மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருநதாள்!

"அம்மா! அம்மா!"

"யாரது?" என்று கேட்டுக் கொண்டே சாந்தா கதவைத் திறந்தாள்! "ஓ! நீங்களா, வாங்க, வாங்க" என்று அழைத்து வந்து சோபாவில் உட்கார வைத்தாள்!

"வழியில் உங்கள் கைக்குட்டையை விட்டு விட்டுவந்து விட்டீர்கள் —இந்தாங்கள்," ராஜன் மெல்லிய குரலில் கூறி, கைகள் நடுங்க கைக்குட்டையை கொடுத்தான்!

"தேங்க்ஸ்"! நன்றியை தெரிவித்துக கொண்டாள் சாந்தா!

"நோமென்ஷன்" என்று கூறிக் கொண்டே ராஜன் சோபாவை விட்டு எழுந்தான்!"

"போகலாம், உட்காருங்கள்—காப்பி...!" சாந்தா குசலம் விசாரித்தாள்!

"வேண்டாம், வேண்டாம்" ராஜன் பிகுவு செய்து கொண்டான்!"

சிறிது நேரம் இருவருமே அமைதியைக் கடைப் பிடித்தார்கள்! சாந்தாவின் உள்ளத்தில் ஏதோ ஒரு புத உற்சாகம் ஏற்பட்டது போல் இருந்தது!

"நீங்கள்...?" பதிலை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்!

"நானும், உங்கள் கல்லூரி மாணவன் தான்!" இதைச் சொல்லுவதில்தான் ராஜனுக்கு எத்தனை மகிழ்ச்சி!

"அப்படியா!" சாந்தாவின் முகத்தில் ஆச்சரிய ரேகைகள் படரத் தொடங்கின!

"உங்கள் சொந்த ஊரே பட்டணந்தானா?" சாந்தா துப்பறியும் வேலையில் ஈடுபட்டாள்!

"இல்லை, இல்லை" ராஜன் சிரித்துக் கொண்டே பதில் சொன்னான்!

"நீங்கள், டேஞ்சூரா?" சாந்தா ஏதோ புலன் கண்டு பிடித்து விட்டதாக நினைத்தாள்!

"எதனால் அப்படி கேட்கிறீர்கள்?" ராஜன் பதில் கேள்வியைப் போட்டான்!

"உங்கள் பேச்சு, தஞ்சாவூர் பேச்சு போல் இருந்தது. அதனால் தான் நீங்கள் தஞ்சாவூரே என்று நினைததேன்!"

"இல்லை, அதற்குப் பக்கத்தில் ஒரு கிராமம்!"

"அப்போ நீங்களும் டேஞ்சூர் டிஸ்டிரிக்டு என்று சொலலுங்கள்" சாந்தா பெருமையோடு கேட்டாள்!

"நீங்கள் கூட டேஞ்சூர் தானா?" ராஜனுக்கு ஏன் இவ்வளவு அக்கறை!

"ஆமாம்! நம்ம இரண்டு பேரும் ஒரே ஜில்லாகாரர்கள் தான்!" சாந்தா சொந்தம் கொண்டாடத் துவங்கினாள்!

"ரொம்ப மகிழ்ச்சி!" ராஜனுடைய உள்ளத்திலும் மகிழ்ச்சிப் பொங்க ஆரம்பித்தது!

"உங்களுக்கு எந்த கிராமம்! சாந்தா அவனை விடவில்லை!"

"மாயவரம்!" ராஜன் பெருமைக்காக நகரத்தின் பெயரைச் சொன்னான்!

"மாயவரமா? ஏதோ கிராமம் என்றீர்களே!" சாந்தாவுக்கு இத்தனை விளக்கம் எதற்கு என்பதுதான் புரியவில்லை!

"மாயவரத்திற்கு பக்கத்திலே உள்ள ஆத்தூர்!" தன் பட்டிக் காட்டின் பெயரை கொஞ்சம் கூச்சப் பட்டுக் கொண்டே சொன்னான்!

"ஓகோ! ஆத்தூரா?" எதையோ கண்டு பிடித்து விட்டதைப் போல் அவள் மனம் மகிழ்ச்சியடைந்தது!

"ஏன்? அந்த ஊர்தான் உங்கள் ஊருமா?

"இல்லை, இல்லை" சாந்தா சமாளித்துக் கொண்டே சொன்னாள்!

"நேரமாகி விட்டது" ராஜன் புறப்பட்டான்!

"நம்ம ஊர்க்காரர்களைப் பார்தது பேசிக் கொண்டிருப்பதில் எனக்கு தனி மகிழ்ச்சி! அடிக்கடி வந்து போங்கள்!" சாந்தாவின் இந்த உறவு எதில் முடியுமோ யார் அறிவார்!

"எனக்கும் அப்படித்தான், அடிக்கடி வருகிறேன்?" கரும்பைக் கண்டால் எறும்பு வராமலா போய்விடும்!

சாந்தாவின் உள்ளத்தில் பழைய சஞ்சலங்களெல்லாம் பஞ்சாய்ப்பறந்தோடி விட்டன! ஆனால் புதிய சஞ்சலங்கள் அவள் மனதைக் குழப்ப ஆரம்பித்தன!

"ஆத்தூர்...! ஆத்தூரில் நமக்குத் தெரியாமல் யார் இருக்க முடியும்? எப்படி இருக்க முடியும்? மிட்டா சொக்கலிங்கம் பிள்ளையின் மகனாக இருப்பாரோ! அல்லது, சைகோன் வைர வியாபாரி சிங்காரம் பிள்ளையின் மகனாக இருப்பாரோ! சிங்காரம் பிள்ளையின் மகன் என்றால் நான் அதிர்ஷ்டசாலி தான்! அப்பாவும் சம்மதித்து விடுவார்! ஒருவேளை அப்பாவின் வைரி வேதாசலத்தின் மகனாக இருந்து விட்டால்! யாராக இருந்தால் நமக்கென்ன? வனப்பூட்டும் நல்ல தேகம் இருக்கிறது! கண்ணைக் கவரும் நல்ல வடிவு இருக்கிறது—எனக்குச் சமமான நல்ல படிப்பும் இருக்கிறது இவகளைவிட வேறு என்ன வேணடி இருக்கிறது!

"அவருடைய பெயர்...?எதை எதையோ விசாரித்தோம்! என்ன மதியீனம்! கண்ணனாக இருக்குமோ—சேச்சே அவருடைய நிறத்திற்கு அந்தப் பெயர் பொருததமே இல்லை! ஏன் பொருத்தமில்லை? கண்ணன் தானே கன்னியர்களை மயக்குவதில் வல்லவன்— "கண்ணா, கண்ணா" என்று கூப்பிட்டால எவ்வளவு இன்பமாக இருக்கும் தெரியுமா? சாந்தா வாலிப உணர்ச்சிக்குப் பலியாகிக் கிடந்தாள்!

ராஜனுக்கு மட்டும் என்ன அந்த உணர்ச்சி இருக்காதா? அவனும் அந்த மோகனப் புன்னகையில் மயங்கி விழத்தான் செய்தான்! வண்ணங்கள் பல காட்டி வானத்திற்கு வண்ணமூட்டும் வான வில்லைப்போன்றது வாலிபம்! அது அழியும் பொருளானாலும் அது செய்திடும் ஜாலவித்தைகள்தான் எத்தனை, எத்தனை! ராஜனுக்கு மட்டும் இது எப்படி விதிவிலக்காக இருக்க முடியும்!

பூங்காவில் பூத்து சிரித்துக் கொண்டிருந்த ஒரு மலரைப் பறித்து முகர்ந்தான்! அது மணக்கத்தான் செய்தது! அந்த மலர் வீசிய மணம் அவனுடைய மனதை பரிமளிக்கத்தான் செய்தது! அந்த பரிமளத்தோடு தன் அறைக்குள் சென்றான்! "இன்பம் எங்கே, இன்பம் எங்கே?" என்று தன் மனதுள் பாடி மகிழ்ந்தான்!

4

பூதானம்

தனசேகரம் பிள்ளை கந்தப்பனை எதிர்பார்த்த வண்ணம் சோபாவில் படுப்பதும், எழுந்து எழுந்து ஹாலில் நடப்பதுமாகவே இருந்தார்!

"ஏன் இன்னும் கந்தப்பன் வரவில்லை! எந்தப் போக்கிரிப் பயல்களாவது அவனுடைய மனதைக கலைத்து விட்டார்களா" என்று கவலையோடு யோசித்த வண்ணம் இருந்தார்!

"என்னங்க, நம்ம கந்தப்பனுக்கு நிலத்தை யெல்லாம் எழுதி வைக்கப் போறீங்களாமே!" தனசேகரம் பிள்ளையின் தாமபததினி கவலையோடு கேட்டாள்!

"யார் சொன்னது?" தனசேகரம்பிள்ளை ஆத்திரத்தோடு கேட்டார்!

"யார் சொல்லணும்? ஊரே சொல்லுதே!"

"சொல்லும், சொல்லும்! ஊர் நம்மை வாழவும் விடாது சாவவும் விடாது!"

"நம்முடைய சொத்து பிள்ளையில்லா சொத்தா என்ன? ஏன் அந்த அன்னக்காவடி பயலுக்கு எழுதி வைக்க வேண்டும் தனசேகரம் பிள்ளையின் தர்ம பத்தினி குடும்ப அக்கறையோடு கேட்டார்!

"எல்லாம் எனக்குத் தெரியும் போடீ!" தனசேகரம் பிள்ளை

அதட்டி தன் மனைவியை உள்ளே அனுப்பினார்!

"வா தம்பி, வா! என்ன சௌக்கியமா?" ஊர்வாயை இரைய வந்த சீமான் சிவ பாதம் பிள்ளையை இப்படி வேண்டா வெறுப்பாக வரவேற்றார்!

"எல்லாம் கேள்விப்பட்டேன் சிவபாதம் பிள்ளை தனசேகரம் பிள்ளையின் வாயைகிண்ட ஆரம்பித்தார்!

"எதைக் கேள்விப்பட்டீர்கள்!" தனசேகரம் பிள்ளை ஒன்றும் அறியாதவர் போல் சொன்னார்!

"நம்ம பண்ணையாள் கந்தப்பனுக்குச் சொத்தை யெல்லாம் எழுதி வைக்கப் போறீங்களாமே!" சிவபாதம்பிள்ளை தனசேகரம் பிள்ளையின் கோபத்தைத் தூண்டி விட்டார்!

"ஆமாம், அதற்கென்ன இப்போ!" தனசேகரம்பிள்ளையின் மனம் கொதித்தது!

"ஊரிலே பெரிய பண்ணை என்றால் எவ்வளவு கௌரவம், எவ்வளவு அந்தஸ்து, எவ்வளவு மரியாதை!" சிவபாதம் பிள்ளை புகழ்மாலை சூட்ட ஆரம்பித்தார்!

"சரி, சரி! அதற்கென்ன இப்போ!" தனசேகரம்பிள்ளை வேண்டா வெறுப்பாக பதில் சொன்னார்!

"அந்த கௌரவம் எப்போதுமே உங்களுக்கு இருக்கணும் என்பதுதான் என் விருப்பம்!"

"அதை காப்பாற்றிக் கொள்ள எனக்குத் தெரியும், நீங்கள் எதுவுமே சொல்ல வேண்டாம்!" தனசேகரபிள்ளை கோபத்தோடு கூறினார்!

அப்போ நான் போயிட்டு வர்றேன்!" சிவபாதம் விடைப் பெற்றுக் கொண்டார்!

"சரி, சரி!" தனசேகரம் பிள்ளை இப்படி விடை கொடுத்தார்!

"நான் செய்த முடிவு ஊருக்கெல்லாம் எப்படி தெரிநதது? பெரிய அறிவாளிகள் போல் எனக்கு அறிவுரை வழங்க வந்து விட்டான்கள்—மடப்பசங்கள், வாழத் தெரியாதவர்கள், உலகத்தோடு ஒட்டிப் போகத் தெரியாத மூட்டாள்கள்!" தனசேகரம் பிள்ளையின் தந்திரம் ஊர் ஜனங்களுக்கு எப்படித் தெரியும்!

இந்த நேரத்தில் கந்தப்பன் உள்ளே நுழைந்தான்!

ஏண்டா கந்தா! ஓசியிலே நிலம வாங்கிக் கொள்ளக் கூட கசக்குதா?

"என்ன எஜமான்!"கந்தப்பன் பயபக்தியோடு நின்றான்!

"உன்னை எட்டு மணிக்கெல்லாம் வரச் சொன்னா, பத்து மணிக்கு வந்திருக்கியேடா! தனசேகரம்பிள்ளைக்கு கந்தப்பன் மீது எவ்வளவு அக்கறை!

"மன்னிக்கணும் எஜமான்! ஸ்டாப்பு பததரம் வாங்க நேரமாச்சு" கந்தப்பன் கும்பிட்டு, கும்பிட்டுப் பதில் சொன்னான்!

"சரி, சரி! ஏ, கணக்கப்பிள்ளை இப்படி வாரும்! இந்த ஸ்டாம்பு பத்திரத்தில் ஒரு சுத்தகிரய சாசனம் எழுதும்" தனசேகம் பிள்ளை தனது கணக்குப் பிள்ளைக்கு கட்டளை இட்டார்!

"எந்தெந்த நிலங்களை எழுதுவது?" கணக்கப்பிள்ளை பணிவோடு கேட்டார்!

"பத்திரங்கட்டளையில் உள்ள பத்து ஏக்காரா, அஞ்சு மதகடியில் உள்ள பத்து ஏக்காரா, எட்டு வட்டத்கில் உள்ள பத்து ஏக்காரா ஆக மொத்தம் முப்பது ஏக்கராவுககும் ஒரு சாசனப் பத்திரம் எழுதும்!"

"அஞ்சுமதகடியில் உள்ள நிலங்கள இருபது பேணி காணுமே! அதையா எழுதச் சொல்லுறீங்க!" கணக்கப்பிள்ளை உண்ட வீட்டுக்கு ரெண்கம் செய்ய மறுததார்!

"சரி! அப்படியானால், பொட்டல் திடலடியில் உள்ள பத்து ஏக்கராவை சேர்த்துக் கொள்ளும்!

கணக்கப்பிள்ளை சாசனப் பத்திரத்தை எழுதிக் கொண்டு வந்து கொடுத்தார்!

அந்த சாசனப் பத்திரத்தில் தனசேகரம் பிள்ளை கையெழுத்துப் போடும் போது கந்தப்பனுடைய உள்ளம் எல்லையில்லாத இன்பத்தை அடைந்தது!

"கந்தா! திருப்தி தானே!" தனசேகரப்பிள்ளையின் உதட்டிலே புன்னகை கொப்பளித்து, கொப்பளித்து வழிந்தது!

"எஜமான்! நீங்கள் தான் கண் கண்ட தெய்வம்" என்று மூன்று தரம் சாஷ்டங்க நமஸ்காரம் செய்தான்!

"ஏண்டா கந்தா! இனிமே நான் சொன்னபடி கேப்பியா, கேக்க மாட்டியா!" தனசேகரம் எதற்கோ அடிபோடுகிறார் என்பது அந்த அப்பாவி கந்தனுக்கு எப்படித் தெரியும்!

"என்ன எஜமான்! அப்படி கேக்குறிங்களே! நான் எப்போதும் உங்கள் அடிமை தான்!" கந்தப்பன் மறுபடியுப்சாஷ்டங்க நமஸ்காரம் செய்ய ஆரம்பித்தான்!

"சேச்சே! எழுந்திருடா!" தனசேகரம் பிள்ளை டரிவு காட்டினார்!

"எஜமான்! இந்தச் செய்தியை பட்டணத்தில் படிக்கிற என் மகன் கேட்டால் எவ்வளவு சந்தோஷப் படுவான் தெரியுங்களா?"

"சந்தோஷப்பட மாட்டானா என்ன? கந்தா! இன்னும் ஒரு காரியம் 'செய்ய வேண்டும்!" தனசேகரப்பிள்ளை சுய உருவம் எடுககத தொடங்கினான்!

"என்ன செய்யணும் எஜமான்! சொல்லுங்கள் செய்யுறேன்!" கந்தப்பன் அப்பாவி போல் பேசினான்!

"இந்த நோட்டில் கையெழுதது போட வேண்டும்" தனசேகரப் பிள்ளை காரியத்தில் இறங்க ஆரம்பிததார்.

"எதுக்கு எஜமான்? ஸ்டாம்பு எல்லாம் கறைய ஒட்டி இருக்கிறீங்களே" கந்தப்பன் படிப்பு வாசனை யற்றவன். அவன் எதை அறிய முடியும்?

"உன்னுடைய மகன் உன்னைப் போல் இருப்பானா?"

"ஏன் எஜமான்?"

"அவன் படித்தவன், நாலு பேர் பேச்சைக் கேட்கக் கூடியவன்! ஒரு வேளை இந்த நிலங்களையெல்லாம் அழித்து விட்டால் நீ என்ன செய்ய முடியும்?'

"நீங்கள் தான் அதுக்கும் வழி சொல்ல வேண்டும்" கந்தப்பன் உள்ளம் எவ்வளவு தூய்மையானது!

"இந்த நோட்டில் கையெழுத்துப் போடு பிறகு உனக்கு வழி சொல்லுகிறேன்!" தனசேகரம் பிள்ளை வெற்றி பெற்று விட்டார்! அப்பாவி கந்தப்பன் நம்பி கையெழுததும் போட்டு விட்டான்!

நிலச் சீர்திருத்தமாம், நிலச்சீர் திருத்தம்! இப்போது அந்த நிலச்சீர்திருத்தம் என்னை என்ன செய்ய முடியும்! கந்தப்பனை ஏமாற்றினேன்! அவனிடம் எதிர்பாண்டு எழுதி வாங்கிக் கொண்டு என்நிலத்தை சாசனம் செய்து கொடுத்து விட்டேன்! இல்லை. இல்லை தானம் சைய்து கொடுத்து விட்டேன்! வருடந்தோறும் அந்த நிலத்தின் வருமானத்தையும் நானே எடுத்துக் கொள்வேன். பட்டா தான் அவன் பேரில், பாத்திய மெல்லாம் எனக்கு தான் இனி எந்தச் சட்டமும் என்னை அசைக்க முடியாது!"

"இதனால் என் பேரும் புகழும் உலகமெல்லாம் பரவும்! 'உத்தமரே' என்பார்கள்! "வள்ளலே" என்பார்கள்! "தியாக ரத்தினமே" என்பார்கள்! இது யாருக்குக் கிடைக்கும்! "தனசேகரம்பிள்ளை சோபாவில் மல்லாந்து படுத்த வண்ணம் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி, மூழ்கி வருங்காலத்தைப்பற்றி ஒரு அழகான சித்திரத்தை வரைதது கொண்டிருந்தார்!

காந்தி பக்தர் கொடை வள்ளலானார்!
வேலையாளுக்குப் பூதானம் செய்த சீமான்

என்று கொட்டை, கொட்டையான எழுத்துகளில், பத்திரிக்கைகளெலலாம் தலைப்பிட்டு, முதல் பக்கத்தில் இந்தச் செய்தியை வெளியிட்டு, தனம்சேகரபிள்ளையைப் பாராட்டின! மந்திரி மார்களும், கவர்னர்களும் பெரிய மனிதர்களும் வாழ்த்துச் செய்தி அனுப்பி தனசேகரம் பிள்ளையின் சீரிய பணியைப் போற்றினர்!

"தனசேகரம் பிள்ளையின் வீட்டிலிருந்த ரேடியோ"உலகே மாயாம், உலகே மாயம்" என்று பாடிக் கொண்டிருந்தது! ஆமாம் உண்மைதான், உண்மைதான் என்று தனசேகரம்பிள்ளை தலையை அசைத்து அசைத்து ரசித்துக் கொண்டிருந்தார்!

(வளரும்)

போலீஸ்பதவி நிரந்தரமானது!
மந்திரிபதவி நிரந்தரமானதல்ல!!

"ஆளுங்கட்சிதான் இன்று எல்லாப் பொறுப்பையும் ஏற்றுள்ளது. அதே போன்று போலீஸ் துறையின் நிர்வாகத்தையும் ஆளும் கட்சி ஏற்றுள்ளது. இந்த நிர்வாகம் அவர்களுக்கு நிரந்தரமானதல்ல! இது அவர்கள் ஏற்றுள்ள ஒரு இடைக்காலப் பொறுப்புத்தான்.

ஆகவே இந்த இடைக்காலத்திற்குள் நிரந்தரமான போலீஸ் துறையினரைக் கொண்டு தங்கள் செல்வாக்கை நிரந்தரமானதாக்கிகொள்ள எண்ணும் ஆட்சியாளரை நான் கண்டிக்கிறேன். அவர்கள் அவ்வாறு கருதுவது தவறாகும். அமைச்சர்கள் கூட இச்செய்கைக்கு தூண்டுதலாக இருக்கிறார்கள் என்று நான் சந்தேகப்படுகிறேன்.

ஆனல் யார் நிர்வாகத்திற்கு வந்தாலும் போலீஸ் பதவி நிரந்தரமானது. மந்திரி பதவி நிரந்தரமானதல்ல!!

—அறிஞர் அண்ணா

அரசியல் நாகரீகத்திற்குப் பங்கம் வரும்படி நடந்து கொள்ளாதீர்கள் !

(அண்ணா பேச்சு)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யலில் மக்கள் ஈடுபடவேண்டியதைப்பற்றியும் நல்ல முறையில் இங்குள்ள அரசியல்கட்சிகள் பிரச்சாரம் செய்து வருகிறது ஜனநாயக முறைகள் நிலைபெற வேண்டியதற்கான முறையோடும் கூட்டங்களை இங்கு நடத்தப்பட்டு வருகிறது. இங்குள்ளவர்களிடம் அரசியல் தெளிவுகள் நல்ல முறையில் வளர்ந்திருக்கிறது இந்த நிலைக்கு பங்கம் ஏற்படாத முறையில் இங்குள்ள அரசியல் கட்சிகள் நடந்து கொள்ள வேண்டும்

இந்த முறையில் பாக்கிஸ்தானில் நடைபெற்று வராததால்தான் அரசியல் நாகரிகத்தைக் கடைப்பிடிக்காததால் தான் ஜனநாயகம் ஒழிந்து சர்வாதிகாரம் வருவதற்கு ஏதுவாயிற்று சர்வாதிகார ஆட்சி ஏற்படுவதற்கு அங்கிருந்த அரசியல் கட்சிகள் நடந்து கொண்ட முறைகளே தான் காரணமாகும்

அயூப்கான் சர்வாதிகாரியாக வந்தபின்தான் அங்கு இருந்த அரசியல் கட்சிகளை யெல்லாம் கலைத்து விட்டார். தடை செய்து விட்டார் அரசியல் கருத்துக்களே அங்கில்லாதபடி செய்து விட்டார்

இன்று பாக்கிஸ்தானில் அரசியல் கருத்துககளை மக்கள் தெரிந்து கொள்ளவே முடியாது சர்கார் கொடுக்கின்ற அறிக்கைகளிலிருந்தோ, அன்றி அயூப்கான் தருகின்ற செய்திகளிலிந்து தான் அரசியலை தெரிந்து கொள்ள முடியும்!

பல அரசியல் கட்சித் தலைவர்களை அயூப்க்கான் அழைத்து "நீங்கள் உங்கள் கட்சிகளைக் கலைத்து விடுங்கள் பத்தாண்டுகளுக்கு ஓய்வாக இருந்து வாருங்கள்" என்று சொல்லி விட்டார். இன்று பாக்கிஸ்தானில் நிலைமையே மாற்ற மடைந்திருக்கிறது.

இன்று நமது மாநிலத்தில் எந்த மந்திரி எதைச் செய்தாலும் தெருவுக்கு வந்து விடுகிறது. மக்கள் அதை உணரும் படி செய்யப்பட்டு வருகிறது. சட்ட சபையில் எது நடந்தாலும், மந்திரிகள் என்ன பேசினாலும் மக்கள் மன்றத்திற்கு வந்து விடுகிறது. இதை ஏன் நான் உங்களிடம் கூறுகிறேனென்றால் நமது தமிழ் நாட்டில், மக்களிடையே ஜனநாயகம் வளரும் படியான நிலைமைகள் ஏற்பட்டு வருகிறது. அதற்கு பங்கம் ஏற்படும் படியாக அரசியல் கட்சிகள். செய்து விடக் கூடாது. அரசியல் கட்சிகள் அந்த ஜனநாயகம் வருவதற்குப் பாடுபட வேண்டும். அதற்குப் பாதுகாப்புத் தரவேண்டும். அப்படி யிருந்தால் தான் மக்களுக்கு அரசியலில பற்று ஏற்படும். மக்களும் கூட்டங்களுக்கு அதிகம் வருவார்கள்.

நாம் நடத்துகின்ற கூட்டங்களுக்கு மக்கள் அதிமாக வருகிறார்கள். அதிலும் பெரியவர்கள் மிக அதிகமாக வந்து கூடுகிறார்கள் பத்தாண்டுகளுக்கு முன் பெரியவர்கள் எந்தக் கூட்டங்களுக்கும் போக மாட்டார்கள். பஜனை மடங்களுக்குத் தான் போவார்கள். நமது தாய்மார்கள் கோயில்களுக்குப் போவார்கள். வாலிபர்கள் கடற்கரைக்குப் போவார்கள் நாடகம், சினிமா பார்க்க போவார்கள் சிறுவர்கள் விளையாடுமிடத்திற்குப் போவார். இன்று அந்த நிலைமாறி எல்லோரும் அரசியல் கூட்டங்களில் கலந்து கொள்ளும் நிலைக்கு வந்திருக்கிறார்கள். இந்த நிலைமையை அரசியல் கட்சிகளில் உள்ளவர்கள் போக்கிக் கொள்ளக் கூடாது.

இன்று காலையில் சட்ட மன்றத்தில் நமது அன்பழகன் அவர்கள் பேசும் போது குறிப்பிட்டார். "காங்கிரஸ்காரர்கள் இன்று அரசியல் மேடைகளில் தரம் கெட்ட நிலையில் பேசுகிறார்களென்றும், அதைத் தடுக்க வேண்டுமென்றும் கூறினார்.

உடனே அமைச்சர் சுப்பிரமணியம் என்னைப் பார்த்தார். உடனே என்னிடம் கூறினார். "நான் கூட இது பற்றிக் கண்டித்திருக்கிறேன். மிகவும் மோசமாகப் பேசி வருவதாகவும் தகவல் வந்திருக்கிறது. இதற்கு ஒரு வழி செய்யலாம் அதாவது இரண்டு கட்சிகளிலுள்ளவர்கள் இப்படித்தான் பேச வேண்டும் என்று முறை வகுத்துக் கொள்ளலாம்" என்றார். அதற்கு நான் 'பார்க்கலாம்'என்று கூறினேன். இன்று காங்கிரசிலுள்ள சில தலைவர்களுக்கு நமது கழகத்தைத் தாக்கிப் பேச வேண்டுமென்பதில் மிகுந்த விருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் மிகமட்டரகமான முறையில் தாக்கி வருகிறார்கள், நாம் அந்த மாதிரியான நிலைக்குப் போக வேண்டாம் என்று நமது தோழர்களுக்கு கட்டுப்படுத்தி வருகிறோம். ஆனால் நமது தோழர்கள் நல்லவர்கள். திட்டாமல் திட்டுவதைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்களென்று நான் கூறவில்லை. சமயம் நேரும் போது இவர்களும் நன்றாகக் கொடுக்கிறார்கள் இதனால் மக்களுக்கு பொது வாழ்வில் அக்கரை இல்லாது போய்விடும். அரசியலே அவர்களுக்கு வெறுப்பேற்பட்டுவிடும்.

காங்கிரஸ்காரர்களைக் கட்டுப்படுத்தி நல்ல முறைக்குக் கொண்டு வருகிற திறமை காமராசருக்கு உண்டோ, இல்லையோ எனக்குத் தெரியாது நம்முடைய கழகத்தைச் சேர்ந்தவர் அத்து மீறிப் போகிறார்கள் என்பதை ஆதாரத்துடன் எனக்குத்தெரிவித்தால் அந்த நிலை மீண்டும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள என்னால் முடியும்.

நமது கழகத்தில் அந்தக் கட்டுப்பாடு இன்னும் கெட்டுப் போக வில்லை. ஆனாலும் ஓரிருவர் உணர்ச்சி வயத்தால் தாக்கி பேசலாம். அந்த உணர்ச்சி எனக்கும் ஒரு காலத்தில் இருந்து வந்தது. அந்தப் பருவ காலத்தைத் தாண்டி விட்டேன். நமது கழகமும் அந்தக் காலத்தை தாண்டி விட்டது. நாம் அரசியல் கூட்டங்களில் கண்ணியத்தை வளர்க்க வேண்டும். அப்படி வளர்த்தால் தான் அரசியல் வளரும்.

இன்று அரசியல் கூட்டங்களில் காங்கிரஸ்காரர்களுக்கு அரைமணி நேரம் கூட பேசுவதற்கு விஷயம் கிடையாது. நமக்கு மக்களிடையே பேசுவதற்குப் பல விஷயங்கள் இருக்கிறது. காங்கிரசின் நிர்வாக ஊழல்களைப் பற்றி மூன்று மணி நேரம் பேசலாம். இன்று நாட்டு மக்களிடையே இருந்து வரும் தொல்லைகளைப் பற்றி பல மணி நேரம் பேசலாம், இன்று காலையில் கூட சட்ட மன்றத்தில் சர்க்காரில் நடைபெற்ற ஒரு ஊழலைப் பற்றி மந்திரி சுப்பிரமணியமே ஒப்புக் கொண்டார்.

உணவு இலாகாவில் 1952-ம் வருடம் ஒரு திட்டம் வகுக்கப் பட்டது. அது 1960ம் ஆண்டு தான், ஒரு இலாகாவை விட்டு ஒரு இலாகாவிற்கு வந்திருக்கிறது இந்த மாதிரி ஒவ்வொருவர் கைக்கு மாறி மாறி போய் வருவதற்கு இவ்வளவு தாமதமாகி வந்திருக்கிறது! இதை நிதி அமைச்சரே கூறினர்.

அரசாங்க இலாகாவில் ஏற்படும் தாமதங்களை நீக்குவதற்காக அயல் நாட்டு வல்லுநர்கள் கொடுத்த திட்டம் என்னவாயிற்று என்று அமைச்சரிடம் நான் கேட்ட போது இந்த மாதிரி ஏற்படும் தாமதங்களைப் போக்க வழிகள் செய்து வருகிறோம் அதற்கான வழிவகைகளை செய்து வருகிறோம் என்றார்,

நமது கழகப் பேச்சாளர்களுக்கும் நான் ஒரு யோசனை கூற ஆசைப்படுகிறேன் நமது பேச்சாளர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்தை எடுத்துக் கொண்டு பேச வேண்டும். ஒருவர் ஐந்தாண்டுத் திட்டத்தை எடுத்து அதைப்பற்றி விளக்கம் கொடுக்க வேண்டும், ஒருவர் வரிக் கொடுமையைப் பற்றிப் பேச வேண்டும், ஒருவர் மத்திய அரசினர் வரி கொள்கையைப் பற்றி விளக்க வேண்டும். ஒருவர் அரசியல் சட்டத்தைப் பற்றி மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்.

ஒரு பேச்சாளரால் இத்தனை பொருளையும் பற்றி ஒரே கூட்டத்தில் பேச முடியாது.

இப்படி எல்லா ஊர்களிலும் பேச வேண்டும். நாட்டிலுள்ள மக்களுக்கெல்லாம் இந்த முறையில் நாம் எடுத்துக் கூறினால், மக்கள் சுலபத்தில் யாவையும் தெரிந்து கொள்வார்கள்.

நாம் இன்று மக்களிடையே பரப்பி வருகின்ற—நாம் நமது உயிரினும் மேலாகக் கருதி வருகின்ற திராவிடநாடு திராவிடர்களுக்கே என்ற மூலாதாரக் கொள்கை எங்கெங்கெல்லாம் யார் யாரிடத்திலெல்லாம் பரவி வநதிருப்பதைக் கண்டு நாம் மனமகிழ்ச்சி யடைகிறோம். பூரிப்படைந்து வருகிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையான பிரிவினை கொள்கையை ஒப்புக் கொள்ளாத பிரஜா சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் பி. எஸ். சின்னத்துரை அவரது கட்சி ஏக இந்தியா கொள்கையை கடைப்பிடித்து வரும் கட்சியாகும். தனி நாடு கேட்பதற்கு விரோதமான எண்ணமுள்ளவர் திரு. சின்னத்துரை நாடு பிரிய வேண்டுமென்று கூறுவது பிற்போக்கு எண்ணம் உடையது என்று எண்ணுபவர் சின்னதுரை அப்படிப்பட்டவர் சட்ட மன்றத்தில் எழுந்து நிதி யமைச்சரைப் பார்த்து, "நமது மாநில அமைச்சர்கள் மற்ற மாநில அமைச்சர்களை விட மத்திய சர்க்காருக்கு— டில்லி சர்க்காருக்கு அடிமையாக இருப்பதேன்" என்று கேட்டார்.

இப்படிக் கேட்டதும் நமது மாநில நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களுக்குக் கோபம் வந்து விட்டது. "நாங்கள் ஒன்றும் யாருக்கும் அடிமையாக இல்லை" என்று பதிலளித்தார்.

மீண்டும் நண்பர் சின்னத்துரை விடவில்லை. "தனித்தனியாகப் பிரிந்து போகும் பம்பாய் குஜராத்தி மாநிலம் மக்களின் விருப்பத்திற்கிணங்க தங்களது மொழியின் பெயரால் பெயர் வைக்கின்ற போது நமது மாநிலத்திற்கு மட்டும் "தமிழ் நாடு" என்று ஏன் பெயரிடவில்லை" என்று கேட்டார்.

உடனே நிதியமைச்சர் தமிழ் நாடு என்ற பெயர் வைக்க வேண்டுமென்று டில்லி சர்க்காரை நாங்கள் கேட்டு அவர்கள் முடியாது என்று சொல்லவில்லை. எங்களுக்கே தமிழ் நாடு என்று பெயர் வைபபது பிடிக்கவில்லை. அதனாலேயே தமிழ் நாடு என்று பெயர் வைக்கவில்லை என்று பதிலளித்தார்.

இந்தவிவாதத்தை நான் சட்ட மன்றத்தில் வேடிக்கை பார்த்துக் கொண்டு கவனித்து வந்தேன்.

இபபொழுது நான் பேச வேண்டியதை—நான் கேட்க வேண்டியதை எனது இலட்சியத்தை வேறு உருவில் நமது கொள்கைக்குப் புறம்பான மற்ற அரசியல் கட்சிகள் கேட்கின்றன, பேசுகின்றன.

கம்யூனிஸ்ட் கட்சி பேசுகிறது. பிரஜா சோஷலிஸ்ட் கட்சிப் பேசுகிறது. இது எனக்கு அரசியல் இலாபந்தானே, நான் சிறிது ஓய்வாகக் கூட இருக்கலாமே.

நான் உடனே அமைச்சரைப் பார்த்துக் கூறினேன் நண்பர் சின்னத்துரை கேட்டது, உங்களிடம் டில்லி சர்க்காரிடம் எதையும் கேட்கின்ற நெஞ்சுறுதியோ தைரியமோ இல்லை என்று" நான் கூறுகிறேன். உங்களுக்கு மற்ற மாநிலங்களிலுள்ள சர்க்கார்களுக்கு உள்ள தன்மான உணர்ச்சி சுயமரியாதை இல்லை என்று கூறுகிறேன் என்றேன். அதற்கு நிதி அமைச்சர் இல்லை இல்லை எங்களுக்குத் தன்மான உணர்ச்சி இருக்கிறது என்று கூறி தனது உணர்ச்சியைக் காட்டிக் கொண்டார்.

அப்படிக்கூறியும் நண்பர் சின்னதுரை விட்டபாடில்லை மீண்டும் அமைச்சர் சுப்பிரமணியத்தைப் பார்த்து 'இந்த மாநிலத்தில் அமைக்க விருந்த மின்சார உற்பத்தி நிலயத்தை போப்பாலுக்கு மத்திய சர்க்கார் மாற்றியதை நீங்கள் கண்டித்தீர்களா'? என்று கேட்டார்.

நிதியமைச்சர் சுப்பிரமணியம் இதற்கு ஒன்றும் பதிலளிக்க முடியவில்லை!

(11-ம் பக்கம் பார்க்க)

நாம் சாதுக்களல்ல—சண்டமாருதம் வீசும் பெரும் புயல்!

(சம்பத் பேச்சு)
(4 பக்கம் தொடர்ச்சி)

ளாது எண்ணத்தை முறியடிக்க வேண்டும்.

இன்று நமது சமூகம் வெளியிலுள்ள மக்கள் இந்தியைப் பற்றி கொண்டிருக்கும் பயத்தை நீக்க முற்பட வேண்டும். அந்த பயத்தை நீக்க வேண்டியது தான் நமது கடமை, நமது கழகம் ஒன்றைத் தான் மக்கள் நம்பியிருக்கிறார்கள். அவர்கள் நம்பிக்கையைப் பாழ்படுத்தக் கூடாது:

இந்தியப் பிரதமர் பண்டித நேரு பாராளு மன்றத்தில் வாக்குறுதி கொடுத்தார். இந்தி பேசாத மாநிலங்களின் சம்மதத்தைப் பெற்று தான் இந்தியைப் புகுத்துவோம். பலாத்கார முறையில் இந்தியைப் புகுத்த மாட்டோம் என்றார், ஆனால் இதற்கு மாறாக இன்று இந்தி வந்து விட்டது.

நமது சகோதரி சற்குணம் பேசும் போது குறிப்பிட்டார் நான் இந்தியைப் பற்றி பேசும் போது பாராளு மன்றத்தில் இந்தி வெறியர்கள் கூச்சல் போட்டதை எடுத்துக் கூறினார்.

ஏன், பாராளு மன்றத்தில் உள் நாட்டமைச்சர் கோவிந்த வல்லபபந்தைப் பார்த்துக் கேட்டேன். "பிரதமர் நேரு இந்த மன்றத்தில் கொடுத்த வாக்குறுதி என்ன வாயிற்று? அதற்கு மாறாக இந்தி வருகிறதே" என்று கேட்டேன். ஆனால் நான் அது பற்றி பேச முடியாதபடி இந்தி வெறியர்கள் வெறும் கூச்சல் போட்டுக் கத்தினார்கள் நான் அதைப் பற்றிக் கூட கவலைப்படவில்லை, இந்த மாதிரி கூச்சல்கள் பலதைக் கண்டிருக்கிறேன்.

ஆனால் அந்த வெறியர்களின் கூச்சலைப் பார்த்துக் கொண்டு மௌனமாக இரண்டு வெறியர்கள் இருந்தார்களே அவர்கள் செய்கையைக் கண்டு தான் வருந்துகிறேன்.

அவர்களுக்கு நேர்மை இருந்திருந்தால், அரசியல் கண்யம் இருந்திருந்தால் வெறியர்களை அடக்கி இருக்க வேண்டாமா? அகில உலக மெங்கணும் அரசியல் கண்ணியத்தைப் பரப்பி வருபவர் என்று கூறப்படும் நேருவின் முன்பு இந்த வெறிச் செயல் நடந்தது. அவருக்கு நேர்மை கண்ணியம் நாகரீகம் கடுகளவாவது இருந்திருந்தால் உடனே நேரு எழுந்து "நான் கொடுத்த வாக்குறுதியைப் பற்றித் தான் கேட்கிறார்" என்று கூறி அந்த வெறியர்களை அடக்கி இருக்க வேண்டாமா? அப்படிச் செய்திருந்தால் அவர் எனக்கு அரசியல எதிரியானாலும் போற்றியிருப்பேன்—புகழ்ந்திருப்பேன்,

அப்படிச் செய்யாது அதைப் பார்த்துக் கொண்டிருந்ததைப் பார்க்கும் போது அரசியலில் அவர் ஒரு ஆண் மகனல்ல. அவர் அரசியல் பேடி என்று தான் கூறுவேன்!

இப்படி அவர் நடந்து கொண்டதால் அகில உலகத்திலும் அவருக்கிருந்த செல்வாக்கைக் குறைத்துக் கொண்டார்.

டில்லியிலுள்ள வெறியர்கள் நம்மைக் கண்டு பயந்திருந்தார்கள் நாம் எதற்கும் போராடுவோம் என்ற எண்ணம் இருந்தது. இன்று அது அவர்கள் உள்ளத்திலிருந்து நீங்கி விட்டதென்று தான் நினைக்கிறேன். காரணம் நமக்கிருந்து வந்த எதிர்ப்பு சக்தி, போராடும் தன்மை மறைந்து விட்டதென்று அவர்கள் கருதிக் கொண்டிருக்கிறார்களோ என்று சந்தேகிக்கிறேன்.

நாம் இந்தியை எதிர்ப்பதற்கு பலமற்றவர்களாகி விட்டோமா என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்களா என்று கூட நினைக்கிறேன் ஆகவே அவர்கள் அப்படி நினைப்பதால்தான் அவர்கள் வெறிச் செயல்களில் ஈடுபடுகிறார்கள் அவர்கள் நினைக்கும் எண்ணம் தவறு என்பதைக் காட்ட வேண்டும்.

நாம் இந்தியை எதிர்த்து ஒரு மாபெரும் போராட்டத்தை நடத்த வேண்டும், அந்தப் போராட்டம் சென்னை நகரில் மட்டுமல்ல. தென்னகமெங்கும் நடத்த வேண்டும். அப்படி நடந்தால் தான் டில்லி ஏகாதிபத்திய வெறியர்கள் நமது உரிமை உணர்ச்சியை—நமது எதிர்ப்புச் சக்தியை அறிய முடியும்.

நம்முடைய கழகம் இன்று போராடும் உணர்ச்சியோடும், போராடும் கருவிகளை கையில் ஏந்தியபடியுமே தான் இருக்கிறது. நமது கழகத்தில் இருப்பவர்கள் போராடும் திறமையற்றவர்களல்ல, இன்று ஊர்வலம் வரும் போது வந்த வீரர்களின் முகத்தைப் பார்த்தேன். அவர்கள் கொண்டிருந்த உணர்ச்சியைப் பார்த்தேன. கழகம் கட்டளையை துடி துடிப்புடன் எதிர்பார்ப்பவர்கள் போல் தான் இருந்தார்கள்.

நம் எதிரிகள் பதுங்கி இருந்து காரியம் செய்கிறார்கள். நாம் அதை உணர்ந்து பணியாற்ற வேண்டும். எதிர்ப்பே நமக்கு, இலை என்று கருதி விடக் கூடாது.

நாம உடனே திட்டங்களை வகுக்க வேண்டும் நாம செய்யும் காரியங்களைப் பார்க்கும் போதே நேரு கிடு, கிடு என்று நடுங்க வேண்டும் மக்கள் சக்தி பெருகி எழுந்து விட்டார்கள் என்று அவர் நினைக்க வேண்டும்,

தென்னாப்பிரிக்காவில் இன்று உரிமைப் போராட்டம் நடந்து வருகிறது. அவர்கள் நடத்தும் போராட்டத்தை நமது நாட்டுப் பத்திரிகைகள் கேலி செய்யும் முறையில் செய்திகள் போடுகிறார்கள் அவர்களைக் கருப்பர்கள் என்று போட்டு வர்ணிக்கிறார்கள் அவர்கள் நிறத்தில் கருப்பர்களாக இருக்கலாம் அதைப் பற்றிக் கவலைப் பட வேண்டாம் அவர்கள் உள்ளத்தில் தோன்றியிருக்கும் உணர்ச்சியும், விடுதலை வேட்கையும். உறுதியும் கண்டு தான் நாம் வெட்கப்பட வேண்டும். அவர்கள் எந்த நிலையில், எப்படிப் பட்டவர்களோடு போராடுகிறார்கள் என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாம் இதுவரை பல போராட்டங்களை நடத்தி இருக்கிறோம். ஒரு போராட்டத்தை விட ஒரு போராட்டம் மிக பலம் வாய்ந்ததாகத் தான் இருந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய எந்தப் போராட்டமும் பிசு பிசுத்தது கிடையாது, பலமற்றுப் போனது கிடையாது அந்த மாதிரியான நிலையும் ஏற்படாது. ஒவ்வொரு போராட்டத்திலும், தியாகங்கள், வீர உணர்ச்சிகள் பெருகிக் கொண்டு தான் வந்திருக்கிறது. அதற்குக் காரணம், நாம் விளம்பரத்திற்காகவோ, பிழைப்பிற்காகவோ. பேரம் பேசுவதற்காக போராட்டங்கள் நடத்துவதில்லை.

உண்மையான தேசிய விடுதலை உணர்ச்சியோடும், அரசியல் உரிமை பெற வேண்டும் என்ற நோக்கோடும் போராட்டம் நடத்துகிறோம் அதுவும் சமயம் சந்தர்ப்பம், நேரம், காலம் பார்த்து, சிந்தித்து, காரியத்தை உணர்ந்து போராட்டம் நடத்துகிறோம். அதனால் தோல்வியடைவதில்லை.

நமக்கு இன்று அந்த நிலை வந்து விட்டது, மீண்டும் நாம் நமது உரிமைப் போராட்டம் நடத்தநிலை வேண்டிய ஏற்பட்டு விட்டது.

நம்முடைய மாபெரும் சக்தியைக் காட்ட வேண்டிய நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. நம்முடைய போர்க் கொடி பறக்க விட வேண்டி சந்தர்ப்பம் வந்துவிட்டது, நமது வீரம், நாம போராடி வெற்றி கண்டவர்கள் பரம்பரை என்பதைக் காட்டும் நாள் வந்து விட்டது. அதற்காக நாம் திட்டங்கள் தீட்ட வேண்டிய சூழ் நிலை நமக்கு வந்து விட்டது. நம்முடைய இனத்தை அழித்து ஒழிக்க நினைக்கும் கூட்டத்தினருக்கு நமது வீரத்தை—சக்தியைக் காட்டும் நாள் வந்து விட்டது. "வாழ்க" என்ற வாழ்த்தொலிகளைக் கிளப்பி ஊர்வலம் வந்தவர்கள் இன்று வீழ்க என்று கூறி போராட வேண்டிய நாள் வந்து விட்டது.

சமீபத்தில் நமது பொதுக் குழு கூட விருக்கிறது.

அப்போது இந்தியை எதிர்த்து போராட்டம் செய்வதற்கான திட்டங்கள் வகுக்கப்படும். அதனால் விரைவில் மாபெரும் போராட்டம் உருவாகும். அந்தப் போராட்டத்தில் நீங்களெல்லாம் ஏராளமாகப் பங்கு கொண்டு நமது உரிமையை நிலை நாட்ட வேண்டும்.

காங்கிரஸ் கட்சியிலிருக்கும் பெரியவர்கள், பாராளுமன்ற அங்கத்தினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் நம்மைத் தனியாகச் சந்திக்கும் போது இந்தியை எதிர்க்கிறார்கள். அதை வரவிடாது தடுக்க வேண்டுமென்று நமது அன்பைப் பெற, நமது பாராட்டைப் பெற எண்ணுகிறார்கள். அவர்களுக்கு இந்தி வேம்பைப் போன்றது என்று காட்டிக் கொள்கிறார்கள்.

வட நாட்டாரைப் பார்த்ததும், வாயை மூடிக் கொள்கிறார்கள், தொடை நடுங்கிகள் போல நடந்து கொள்கிறார்கள் இப்படிப்பட்ட துரோகிகள் தான் தமிழ் நாட்டு காங்கிரசில் இருக்கிறார்கள்.

மந்திரி பக்தவச்சலம் கோவையில் பேசும் போது மைல்கற்களில் இந்தி எழுதுவது பற்றிக் கண்டித்துப் பேசினார்.

"தமிழ் நாட்டில் இந்தியை இப்படிப் புகுத்துவது எனக்குப் பிடிக்கவில்லை. எங்களுக்கு இது தெரியாது" என்றார்.

நான் உடனே மக்கள் சபையில் மந்திரி பந்தைக் கேட்டேன் தமிழகத்தில் மைல் கற்களில் இந்தி எழுத்துக்கள் எழுதுவதைப் பற்றி அந்த மாநில அமைச்சர்களின் அபிப்பிராயம் தெரிந்து எழுதப் படுகிறதா என்று, அதற்குப் பந்து பதில் சொன்னார்.

தமிழ் நாட்டு மந்திரிகள் மைல்கற்களில் இந்தியில் எழுதுவதற்கு எதிர்ப்பாக ஒருவர் கூட எழுதவில்லை, என்று கூறி விட்டு மேலும் பந்த் இங்குள்ள அமைச்சர்களைப் பற்றி என்ன கூறினார் தெரியுமா? அவர்களெல்லாம் இந்தியை எதிர்த்துப் பேசவே மாட்டார்கள்.

இதிலிருந்து நமது மாநில அமைச்சர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள், இவர்கள் டில்லி வெறியர்களிடம் எப்படி நடந்து கொள்ளுகிறவர்கள் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்,

இரவு நேரங்களில் கதவைப் பூட்டுப் போட்டு விட்டுத் தூங்கும் போது ரகசியமாகத் திருடர்களுக்கு கதவைத் திறந்து விடும் எட்டுத் துரோகிகளைத் தான் நாம் நமது மாநில அமைச்சர்களாக வைத்திருக்கிறோம் என்று தான் எண்ண வேண்டியிருக்கிறது.

இங்குள்ளவர்களுக்கு பதவியைப் பற்றியும், அவர்கள் அமர்ந்திருக்கும், நாற்காலியைக் காப்பாற்றுவது பற்றியும் கவலைப்படுகிறார்களே தவிர நமது நாட்டைப்பற்றியோ, நமது மக்களைப் பற்றியோ அவர்களுக்குக் கவலையே கிடையாது. பதவி போகாதிருப்பதற்காக டில்லிக்காரர்களிடம் எப்படி நடந்து கொள்வது என்பதைப் பற்றித் தான் அவர்களுக்குக் கவலை. இவர்கள் தங்களது ஆட்டபாட்டத்தால் பெரிய திட்டங்களையெல்லாம் கோட்டை விட்டு சும்மா இருக்கிறார்கள். நாமும் சும்மா இருந்து விட்டால் நமக்குப் பெரிய ஆபத்து வந்து சேரும். நம்முடைய நாடு இந்தி வெறியர்களின் ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப் பட்டுத் தான் இருக்கும். நமது மக்களெல்லாம் அடிமைகளாகத் தான் வாழ வேண்டிய நிலை ஏற்படும்,

நம்முடைய பிற்கால சந்ததிகள் நம்மை இழித்துப் பழித்துப் பேசுவதுடன், கையாலாகதவர்கள் என்றும், துரோகிகளென்றும், நாட்டை மாற்றாருக்குக் காட்டிக் கொடுத்தவர்களென்றும் நம்மைத் தூற்றுவார்கள்.

(10ம் பக்கம் பார்க்க)

பிற்காலத்தவர் பழிக்கும்படி நாம் நடக்கக் கூடாது!

(சம்பத் பேச்சு)

(9ம் பக்கத் தொடர்ச்சி)

நம் நாட்டிலுள்ள படித்தவர்களைவிட படிக்காதவர்களே மேலானவர்கள் என எண்ணுகிறேன், படித்தவர்களுக்கு எதிலும் பற்றும் ஆர்வமில்லாதவர்கள் போல் பேசுகிறார்கள். நம்பிக்கையற்றவர்கள் போலவும் பேசுகிறார்கள் போராட்டம் நடத்தினால் வெற்றி பெற முடியாதென்றும் சமாதான முறையில் போக வேண்டுமென்றும் கூறி வருகிறார்கள்.

நாம் பெற வேண்டிய உரிமைகளைப் போராடியே பெற முடியுமே தவிர சமாதான முறையிலோ, பேச்சு வார்த்தையிலோ உரிமைகளைப் பெற முடியாது. இதை இப்போது உலக அரங்கில் சமீபத்தில் நடைபெற்ற சில சம்பவங்களிலிருந்து நாம் புரிந்து கொள்ளலாம்.

சமாதானத்தை நிலை நாட்ட வேண்டுமென்பதற்காக ஐசனோவர் வந்தார், குருசேவ் வந்தார், குயென்லாய் வந்தார். சமாதானமே தங்களது உயிர்நாடியென்று அறிக்கை விட்டார்கள்! அப்படி இருந்தும் என்ன வாயிற்று ஒரு சிறிய உரிமைப் பிரச்சினையால் இரண்டு நாடுகளும் துடித்துக் கொண்டிருக்கின்றன. குருசேவ் ரஷ்யப் பாராளுமன்றத்தில், தமது ஆர்வத்தையும், துடிதுடிப்பையும் 45 நிமிடப் பேச்சால் கொட்டியிருக்கிறார். இவர்கள் பேசிய சமாதானங்கள்—பேச்சு வார்த்தைகள் என்ன வாயிற்று உரிமையைப் பெற வேண்டுமென்று நினைக்கும் போது விடுதலை வீரர்கள் தங்கள் இலட்சியத்தில் எந்த விதத்திலும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள்.

நமக்குப் போராடும் வலிமை இருக்கிறது. அது நம்மிடமிருந்து மாறவில்லை என்பதை நமது எதிரிகள் உணர்ந்து கொள்ளும்படி நமது செய்கைகள் காரியங்கள் இருந்து கொண்டே இருக்க வேண்டும்.

சென்னைக்குப் பண்டித ஜவகர்லால் நேரு வந்தார். அவருக்கு நாம் நமது எதிர்ப்பைத் தெரிவிக்கக் கருப்புக் கொடி பிடித்தோம்.

அந்த எதிர்ப்பையும், நமது உணர்ச்சியையும், நமக்கிருந்த போராட்ட சக்தியையும் உணர்ந்தார். சென்னையிலிருந்து டில்லி போகும் போதே கருப்புக் கொடி சம்பவத்தை நெஞ்சில் நிலை நிறுத்தி வைத்தே சென்றார். நம்முடைய உணர்ச்சி என்றும் நிலை பெற்றிருக்குமென்றே எண்ணி டில்லி பாராளுமன்றத்தில் அரசியல் சட்டத்திற்கு விரோதமாகக் கூறினார். "அரசியல் மொழியாக இந்தி வைப்பதைப் பற்றி இந்தி பேசாத மாநிலங்களின் அபிப்பிராயத்தைக் கேட்டே முடிவு செய்யப்படும் என்று உறுதி கொடுத்தார், ஆனால் அதற்கு மாறாக இந்தியக் குடியரசுத் தலைவரின் உத்திரவோடு அறிக்கை வந்திருக்கிறதென்றால் அதன் பொருள் என்ன? நாம் போராட மாட்டோம். அந்த உணர்ச்சி நமக்கில்லை என்று அவர் நினைக்கிறார் என்ற பொருள் தானே? நாம் அந்த எண்ணத்தை அவர்கள் உள்ளத்திலிருந்து மாற்ற நாம் போராடும் சக்தியாலே தான் இருக்கிறோம், அந்த வலிவை இழக்கவில்லை என்பதை செய்கையில் காட்ட வேண்டும்.

அரசியல் உரிமைகள் பெற வேண்டுமென்றால் பேரங்கள் பேசுவதாலோ, கெஞ்சிக் கேட்பதாலோ வந்து விடாது. உரிமை உயிரினும் மேலானது மனிதனுக்கு உரிமை இல்லா விட்டால் எதையும் செய்ய முடியாது.

ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னாட்டின் வளத்திற்கு ஏராளமான திட்டங்கள் வகுக்க வேண்டுமென்று கேட்டு பெற்று விட்டால் அரசியல் உரிமை வந்து விடாது அப்படி அரசியல் உரிமை வந்தாலும் நிலைக்காது. அரசியல் உரிமை வந்துவிட்டால் நமக்கு வேண்டிய எல்லாவிதத் திட்டங்களையும் நாமே வகுக்கலாம்! ஒரு சில காரியங்களை செய்வதற்கு அவர்களிடம் தொங்கிக் கொண்டிருந்தால் நம்மைக் கேவலமாக மதிப்பார்கள். அரசியல் உரிமை போராடி பெற வேண்டுமே ஒழிய மகுடி ஊதி பெற முடியாது. பாட்டுப் பாடி, நாடகம் ஆடி அரசியல் உரிமை பெற முடியாது. தென்னாட்டிற்காக சில வசதிகளைப் பெற்று விட்டால் மட்டும் நமக்கு உரிமை வந்து விடாது. நமக்குத் தேவையானது அரசியல் உரிமை அதை பெற போராடியே தீருவோம்,

தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவைச் சுற்றிப் பார்ப்பதற்காகச் சில உறுப்பினர்கள் வந்தார்கள். அவர்கள் எனது விருந்தினர்களாக இருந்தார்கள்.

அவர்களுக்குத் தென்னாப்பிரிக்காவில் பல வசதி இருந்து வருகிறது, அவர்களுக்குப் பண வசதியும் இருந்து வருகிறது.

ஆனால் அங்கு அவர்களுக்கு அரசியல் உரிமையே கிடையாது. அவர்கள் பண வசதியைக் கொண்டு எந்த சௌகரியங்களைச் செய்தாலும் சட்டப்படி தடுக்கிறார்கள் குடியிருப்புச் சட்டம் என்ற பெயரால் அவர்களுக்குப் பல தடைகள் விதிக்கிறார்கள்,

இந்தியாவிற்கு அவர்கள் வரும் போது ஒரு காரையும் கொண்டு வந்தார்கள். அந்தக் காரைக் கொண்டு வந்து. கொண்டு போக ஏராளமான பணத்தைச் செலவு செய்தார்கள்.

அப்படி இருந்தும், ஏராளமான வரும்படியும், வசதியுமிருந்தும் உரிமை இல்லாததால் போராடுகிறார்கள். ஆகையால் வசதி இருந்தால் மட்டும் போதாது அரசியல் உரிமையும் வேண்டும், அந்த உரிமையைப் பெற போராடியே தீர வேண்டும், அந்தப் போராட்டம் செய்வதற்கு நமது திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றால் தான் முடியும். அந்தக் கழகம் அழைக்கும் போது ஓடி வர ஏராளமான வீரர்கள் நம்மிடம் இருக்கிறார்கள்,

கழகம் எந்த ஆணையிட்டாலும் எந்தப் போராட்டத்திற்கு அழைத்தாலும் அதை நிறைவேற்றி களத்தில் குதிக்க ஏராளமான வாலிபர்கள் உறுதியோடு காத்திருக்கிறார்கள்.

எந்தவித தியாகத்தையும், உயிரையும் பணயம் வைக்கத் தயாராக உள்ள உண்மை வீரர்கள் நம்மிடம் இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட அருமையான சக்திகளைப் படைத்த நாம் ஏன் சும்மா இருக்கவேண்டும்.

நம்முடைய கழகம் ஆந்திராவிலும் கேரளத்திலும், கன்னடத்திலும் பரவவில்லை என்று அகில இந்திய காங்கிரஸ் தலைவா கேலி செய்கிறார்.

ஆந்திரத்தில் உண்டா கழகம் என்று கேட்கிறார்: அப்படிக் கேட்பதை நான் கேலி என்று எடுத்துக் கொள்ளவில்லை. ஆந்திரத்திற்கும் வந்து முன்னேற்றக் கழகப் பணியைச் செய்யுங்கள் அங்குள்ள மக்களைத் தட்டி எழுப்புங்கள் என்று மறைமுகமாக அழைக்கிறார் நாமும் தமிழ் நாட்டில் எப்படி பணியாற்றுகிறோமோ அப்படி நாலு மாநிலங்களுக்கும் சென்று பணியாற்ற வேண்டும் எங்கும் நமக்கு ஆதரவு இருந்து வருகிறது. அங்குள்ளவர்களுக்கு நாம் சொல்லும் கருத்துகள் பரவி வருகிறது. நாம் அங்கு சென்றுவலுப் பெறச் செய்ய வேண்டும்.

நாம் நமது கழகத்தை வட சென்னையில் விடாத மழையில் ஆரம்பித்தோம். அப்போது இவ்வளவு வலிவு இருக்குமா என்று நாம எதிர்பார்க்கவில்லை அன்று இருந்ததை விட இன்று கிளைக்கழகங்கள் அதிகம் அங்கத்தினர்கள் அதிகம் எப்படி இந்த வலிவு நமக்கு ஏற்பட்டது நமது உழைப்பாலும், நமது தியாகத்தாலுந்தான். இனி நாம் அதை விட அதிகமான தியாகம் செய்ய வேண்டும். அந்த தியாகம் செய்வதற்கு நம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும். நாம் பழைய கதைகளைப் பேசிக் கொண்டிருக்கக் கூடாது, சேரன் செங்குட்டுவன் பாண்டியன் வரலாறுகளைக் கூறி வருவதாலும் அவர்களைப் பற்றி பேசி வருவதாலும் அவர்களுடைய பெயர்களை வைத்து விடுவதாலும் நம்முடைய கடமை தீர்ந்து விடாது. கனகவிசயன் கதையைக் கூறி, அவன் இழித்தும் பழித்தும் கூறியதையும் கல் சுமக்க வைத்த கதையைச் சொல்வதாலும் வீரம் வந்து விடாது. பாண்டியன் வீரத்தையும் ஆர்வத்தையும் நாம் கடைப்பிடிக்க வேண்டும். வட நாட்டிலுள்ளவர்களுக்கு உள்ள ஆர்வமும், வீரமும் நமக்குக் கிடையாது அவர்கள் பல காரியங்களை போராடி சாதித்துக் கொள்கிறார்கள். சமீபத்தில் டில்லியில் டாக்ஸி டிரைவர்கள் வேலை நிறுத்தத்தை பார்த்தாலே தெரிந்து கொள்ளலாம் முதலில் மறுத்த சர்க்கார் பணிந்து அவர்களுக்குச் சலுகை காட்டியது.

சூயென்லாய் வரும் போது எதிர்ப்புத் தெரிவித்து பெரிய ஊர்வலம் நடத்தி நேரு மாளிகைக்குச் சென்றார்கள் நேருவே வெளியில் வந்து சமாதானப் படுத்தினார் அவர்களுக்கிருக்கும் வீரம் நமக்கில்லையா, நாம் கோழைகளாக இருக்கக் கூடாது. உடனே ஆதிக்க வெறியர்களை எதிர்த்துப் போராட வேண்டும்.

டில்லி பாராளுமன்றத்தில் அமைச்சர் கே. சி ரெட்டியை இந்தியில் பேசும்படி கூச்சல் போட்டு எதிர்த்தார்கள். வெறி நாய்கள் போல் கத்தினார்கள் இந்தி எனக்கு தெரியாது என்று கூறியும் கத்தினார்கள். இந்த வெறிச் செயலை தலை காட்டாதபடி கடுத்து நமது உரிமை நிலை நாட்ட வேண்டும் நம்முடைய தமிழ் நாட்டில் வடநாட்டார் வந்து இந்தியில் பேசுவதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம் இங்கு இந்தி மண்டல பிரச்சார சபாக்கள் இருந்து கொண்டு, ஆண்டு விழாக்களை நடத்திக் கொண்டிருப்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இவைகளையெல்லாம் வளர விடுவதால் தான் நம்மை கோழைகளாக மதிக்கிறார்கள்.

நேரு சென்னைக்கு வந்தால் கூட்டத்தில் பேசுவதற்கு முன் இந்தியில் பேசுவதா, ஆங்கிலத்தில் பேசுவதா என்று கேட்டுப் பேசுகிறார்.

நமக்கு மொழிப் பற்றும் விடுதலை உணர்ச்சியும் இருப்பதைத் தெரிந்தால அவர் அப்படி கேட்பாரா இந்த மாதிரியான காரியங்களில் நாம் மிகவும் கவனத்தோடு இருந்து எதிர்க்க வேண்டும். வருகின்ற போராட்டத்திற்கு நீங்கள் எல்லாம் தயாராக இருக்க வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன்.

வணக்கம்.

நம்முடைய கொள்கைகள் நல்லவை என்பதாலேயே பிற கட்சியாரும் ஆதரிக்கிறார்கள்!

(அண்ணா பேச்சு)

(8ம்-பக்கத் தொடர்ச்சி)

ஒரு புத்தகத்தைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். பின் அவரால் என்ன செய்ய முடியும்.

அகில இந்தியாவைப் பேசு கின்ற 'பிரஜா சோஷலிஸ்ட் கட்சியைச் சார்ந்த அங்கத்தினர்களே மாநில சர்க்காருக்கு மத்திய அரசினர் செய்து வரும் பாரபட்டத்தை எடுத்துக் கேட்கிறார்கள்.

நாம் கேட்டால்தான் பிரிவினை எண்ணத்தோடு — குழப்பம் செய்யும் நோக்கோடு கேட்கிறோம் என்று கூறுகிறார்கள். இப்பொழுது நமக்கு மாற்றுக்கட்சியினராக உள்ளவர்களும், நமது மாநிலத்திற்கு, மத்திய அரசினர் செய்து வரும் பாதகங்களை, கேடுகளை உணர்ந்து விட்டார்கள்.

கம்யூனிஸ்ட்கட்சி விடுத்த ஒரு அறிக்கையில், மாநில அரசினருக்கு மத்திய அரசினர் உரிமை வழங்குவதில்லை யென்றும். எல்லா அதிகாரங்களிலும் மத்திய அரசினர் தலையிடுகின்றனர் என்று கூறியிருக்கிறது.

அது போன்றே சுதந்திரக் கட்சியைச் சார்ந்த ஆச்சாரியாரும் மாநில அரசினருக்கு மத்திய அரசினர் பஞ்சாயத்து சபைக்கு நகரசபைக்கு இருக்கும் அதிகாரங்களைக் கொடுத்து விட்டு எல்லாக் காரியங்களிலும் தலையிடுகிறார்கள் என்றும் கூறி வருகிறார்.

நமது நண்பர் தமிழரசுக் கட்சித் தலைவர் ம.பொ. சிவஞானம் அவர்களும் மத்திய சர்க்கார், மாநில சர்க்காரின் காரியங்களில் தலையிடுவதைக் கண்டிருக்கிறார் நமது மூலனுள் தலைவர் பெரியார் அவர்களும் இன்று சுயராஜ்யம் பம்பாயுக்கு என்று கூறுகிறார். மற்றும் இந்த மாநில அமைச்சர்களுக்கு மானமோ, ரோஷமோ ஆனியும் இல்லை. இது மிகவும் கேவலமானது என்றும் பல அரசியல் கட்சித் தலைவர்கள் கூறி வருகிறார்கள்.

பத்தாண்டுகட்கு முன் நாம் கூறி வந்ததை, நாம் மக்களிடம் சொல்லி வந்ததை நம்மை எதிர்த்தவர்கள், நாம் சொன்னதை ஆட்சேபித்தவர்கள் இன்று ஆதரிப்பதுடன், அதற்காக சர்க்காருக்கு எடுத்துரைத்தும் வருகிறார்கள்.

மத்திய அரசினருக்கு அதிகமான அதிகாரங்கள் இருக்கிறது. மாநில அரசினருக்கு அதிகாரமில்லை இதை நாம் அன்று கூறினோம். இன்று பல அரசியல் கட்சித் தலைவர்கள் ஒப்புக்கொண்டு விட்டார்கள். ஏன் சில காங்கிரஸ்காரர்களே ஒப்புக் கொண்டு விட்டார்கள். கட்சிக் கட்டுப்பாட்டிற்குப் பயந்து வெளியில் சொல்ல முடியாது தவிக்கிறார்கள்.

ஒரு கட்சியின் கொள்கைகள் நல்ல கொள்கையாக இருக்கிறதென்றால் அதை மற்றவர்கள் கேட்டவுடன் தெரிந்தவுடன் பின்பற்ற வேண்டும், அதுவன்றி அதற்கு எல்லோருடைய ஆதரவும் இருக்க வேண்டும். அப்போதுதான் அந்தக் கொள்கை மக்கள் விரும்பும் கொள்கை என்று சொல்லப்படும். இன்று நாம் கூறிவரும் கொள்கைகள் நல்லவைகளாக இருந்து வருவதால்தான் எல்லோரும் பின்பற்றுகிறார்கள்.

இன்னிசை வித்வான் ஒருவன் திறமையுள்ளவன் என்று தெரிந்து கொள்ள வேண்டுமானால் அவனுடைய பக்கத்து வீட்டுக்காரர்கள் எல்லாம் பாட்டுப் பாட வேண்டும் ஒரு சினிமாவில் நல்ல பாட்டு அமைந்திருக்கிறதென்றால் பார்த்து விட்டு வருபவர்களெல்லாம் வழியில் பாடிக் கொண்டு வர வேண்டும் இது போல் தான் நாம் கூறி வரும் கொள்கைகளைப் பின்பற்றுவதற்கு அறிகுறியாகும்.

நம்மைப் பார்த்து நமது மாற்றார்கள் கேட்கலாம்—காங்கிரஸ் தலைவர்கள் கேட்கலாம்—அமைச்சர்கள் கேட்கலாம்.

நீங்கள் சொன்ன அரசியல் கட்சித் தலைவர்களெல்லாம் அப்படிப் பேசுகிறார்கள் என்றால்— நீங்கள் கேட்கும் பிரிவினையை அவர்கள் ஒப்புக் கொள்ளுகிறார்களா அவர்கள் திராவிட நாடு பிரிய வேண்டுமென்கிறார்களா என்று அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. நான் சொல்லும் கருத்துக்களை அவர்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் ஒரு பாணியில் சொல்லுகிறார்கள். அவர்கள் ஒரு பாணியில் சொல்லுகிறார்கள். நான் ஒரு பாணியில் சொல்லுகிறேன்.

கோசல்ராமுக்கு குப்பம்மாளை மணமுடிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அந்தப் பெண்ணே நமக்கு வேண்டாம்.

அந்த சம்பந்தமே கூடாது என்கிறோம். அந்தப் பெண் நன்றாக இல்லை அறிவுள்ள பெண்ணல்ல, அழகில்லை கருப்பு நிறம் கண்ணில்லை என்கிறோம்,

மற்றவர்கள் கூறுகிறார்கள். திருமணமாகட்டும் அப்புறம் அந்தப் பெண்ணிற்கு மேக்கப் செய்து கொள்ளலாம். அழகான பெண் ஆக்கிக் கொள்ளலாம். அறிவான பெண்ணாக ஆக்கிக் கொள்ளலாம் என்று.

சுதந்திரக் கட்சித் தலைவர் ஆச்சாரியார் கூறுகிறார். "குப்பம்மாள் அழகில்லாதவள் தான், என்னை அங்கு அனுப்புங்கள் எல்லாம் நன்றாக ஆக்கிக் கொள்ளலாம்" என்று.

கம்யூனிஸ்ட் கட்சியார் சொல்லுகிறார்கள், "எப்பொழுது குப்பம்மாள் வேண்டு மென்று நினைக்கிறோமோ அப்பொழுது தான் வேண்டும், மற்ற சமயங்களில் வேண்டாம்" என்று.

இப்படி ஒவ்வொருவருடைய கருத்துக்களை நீங்கள் சிந்தித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்!

பத்திய அரசு அலட்சணமானது அது நமக்கு வேண்டாம் என்கிறோம். ஒருவர் திருத்தி விடலாம் என்றும், மற்றவர்கள் வேறு கருத்தைச் சொல்லுகிறார்கள்.

நான் மேலே கூறிய கதையை நீங்கள் நாலைந்து பேர்கள் கூடிப் பேசிப் பாருங்கள். காங்கிரஸ்காரர்களும் நாங்கள் டில்லிக்குப் போன பின் தான் "குப்பம்மாள்" அவலட்சணமானவள் என்பது தெரிந்தது என்று கூறுகிறார்கள்.

நம்முடைய தோழர்களிடம் நான் ஒன்று கேட்கப் பிரியப்படுகிறேன். நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் தான் மிக ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும்! நமது காரியங்களைச் சாதித்துக் கொள்வதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும்.

"நல்ல சமயமடா, இதை நழுவவிடுவாயோ" என்று இசையரசு எம்.எம். தண்டபாணி தேசிகர் பாடியிருக்கும் பாட்டை மறந்து விடக் கூடாது, நாம் எப்பொழுதும் காரியத்தில் கண்ணாக இருக்க வேண்டும்,

எதிர்க்கட்சியிலுள்ள நாலாந்தரம். ஐந்தாம்தரம் பேர்வழிகள் தூற்றுவதைக் கண்டு ஏன் ஆத்திரப்படுகிறீர்கள் "எங்கள் அண்ணாவையே திட்டுகிறார்களே நாங்கள் எப்படி சும்மா இருப்போம் என்று நீங்கள் கேட்கலாம். நானே சும்மா இருக்கிறேனே நீங்கள் அதற்காக ஏன் கவலைப்படுகிறீர்கள்?

"என்னை அண்ணா அண்ணா என்று அன்புடன் அழைக்கும் தம்பிமார்கள் இத்தனை பேர்கள் இருந்தும் அவர்கள் தூற்றுவதைத் தடுக்கவில்லையே என்று கேட்பேனு என்று நினைக்க வேண்டாம்.

இன்று தென்னகத்தில் எனக்குக் கிடைக்க வேண்டிய புகழும், பேரும் ஏராளமாகக் கிடைத்து விட்டது.

தென்னகத்திலுள்ள கோடிக்கணக்கான மக்கள்—ஏராளமான வலிபர்கள் அன்போடும், பாசத்தோடும், பற்றோடும் தங்களது குடும்பத்தில் இருக்கும் மூத்தவரைக் கூட "அண்ணா" என்றழைப்பதற்குப் பதில் என்னைத் தான் அண்ணா என்றழைக்கிறார்கள் இதை விட எனக்கு வேறு என்ன பெருமை இருக்கிறது. ஏதோ ஓரிரண்டு பேர்கள் தூற்றுவதை நாம் ஏன் லட்சியம் செய்ய வேண்டும் அவர்களுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கும் நேரத்தை நமது கொள்கையைப் பிரச்சாரம் செய்வதில் செலவழிக்க வேண்டும்.

நாம் சென்ற பத்தாண்டுகளில் காங்கிரஸ் தனது நாற்பதாண்டு பெறமுடியாத பலனைப் பெற்றிருக்கிறோம். அகில உலகத்தில் பத்தாண்டுகளில் நம்மைவிட யாரும் இந்த நிலை அடைந்தது கிடையாது. இதை எங்கும் வாதாடத் தயார். நம்முடைய வளர்ச்சியைப் பார்த்தால் மாற்றாருக்கு வயிறு எரிகிறது. அதனால் இழிவாகத் தூற்றுகிறார்கள்.

தமிழகத்தில் பட்டிதொட்டிகளிலெல்லாம் நமது கிளைக்கழகங்கள் வளர்ந்திருக்கிறது. சென்னை மாநகராட்சி மன்றம் நமது கையில் இருக்கிறது. இந்த நிலை நமக்குப் பத்தாண்டுகளில் கிடைத்திருக்கிறது.

அடுத்து 1960-ம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற ஏராளமான பணம் செலவழிக்க வேண்டும். காங்கிரஸ்காரர்களிடம் ஏராளமான பணக்காரர்கள் இருந்து வருகிறார்கள். நம்மிடம் ஏழைகளாகிய நீங்கள் தான் இருக்கிறீர்கள். ஆகையால் நீங்கள் உங்கட்குக் கிடைக்கிடைக்கும் ஒரு காசு, இரண்டு காசுகளை உண்டியலில் சேர்த்து வைத்து தேர்தல் நிதிக்குக் கொடுங்கள். அப்பொழுது தான் நாம் நமது இலட்சியத்தை அடைய முடியும் என்று கேட்டு விடை பெறுகிறேன்.

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

போன்றவன்றைச் செய்துவிட்டு ஏன் மடநிலங்களை எல்லாம் சர்க்கார் எடுத்துக்கொள்ளக் கூடாது? இவ்வாறு செய்வது உண்மையில் மதத்தைக் காப்பதாகவே இருக்குமே அன்றிச் சிலர் எண்ணுதல் போல அழிப்பதாக ஒருகாலும் இருக்காது.

இக்குறைகளை எல்லாம் கூட்டுக்கமிட்டி ஆராய்ந்து, சிந்தித்து முடிவு கட்டும் என்று நம்புகிறோம்.

புலிக்குப் பசித்தால் புல்போட மாட்டார்கள்.

சமுதாயத்தின் அடித்தளத்தில் நொறுங்கிக்கொண்டிருந்த விவசாயி விழித்தெழுந்து விட்டான். அவனது விழிப்பை நல்ல முறையில்பயன் படுத்தி. தேசிய வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவே நிலச்சீர்திருத்தங்கள்.

எனவே விழித்தெழுந்த புலிக்கு உணவு அளிக்க—நில உச்சவரம்பு மசோதாவின் ஓட்டைகளை அடைத்தாகவேண்டும். பொறுப்பிலே உள்ளவர்கள் இதைப் புரிந்து கொள்வார்களாக!

இந்த ஓட்டு வேட்டையாளர்கள் மீது இப்படி யெல்லாம் கடுமையாகத் தாக்கி விட்டு— காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள் சொல்லும் இந்த குற்றச்சாட்டுகளை—பொறுப்பில் உள்ளவர்கள்—அதாவது மந்திரிமார்கள் கவனிப்பார்களா என்றும் கேட்டிருக்கிறார்!

புலி விழித்தெழுந்து விட்டதாம்! அதாவது, அடிமையாய்க் கிடந்த ஏழை உழவர்கள் உணர்ச்சி பெற்று கொந்தளிக்கும் உள்ளத்தோடு, கொதிக்கும் நெஞ்சோடு குமுறி நிற்பது— தூங்கிக் கிடந்த புலி எழுந்து விட்டதற்கு சமானம்—என எச்சரித்து—புலிக்கு உணவு அளிக்காவிட்டால் என்ன நேரும் என்பதை மறைமுகமாகவும் எச்சரித்திருக்கிறார்! வாழ்க! நீடூழி வாழ்க!

இது குடும்பச் சண்டை என்பார்கள்! "அப்படியா? இதுவா குடும்பச் சண்டை!

"குடும்பச் சண்டை எங்கும் உண்டே என்பார்கள்! எங்கும் உண்டா? அது இப்போது புரிஞ்சுதோ! "சரி, சரி ஒழிஞ்சு போங்க"! உங்கள் பதவிச சண்டையில்எங்களுக்கென்ன வேலை!

Registered asa a News Paper in CEYLON
Regd. No.M.7074 **MALAIMANI** விலை 16 காசு Phone No.83285
இலங்கையில் 20 சதம்

காங்கிரஸ் கோட்டைக்குள் குத்து, வெட்டு-சிண்டுபிடிச் சண்டை!

ஓட்டை வாளியால் தண்ணீரை இறைக்காதே!

மிட்டா, மிராசுகளைப் பாதுகாக்க உச்சவரம்பு கொண்டுவராதே!

புலி விழித்தெழுந்து விட்டது! அதற்கு உணவளிக்க மறுக்காதே!

"தினச் செய்தி" ஆசிரியர் கோசல்ராம் கொடுக்கும் சவுக்கடி!

திருவாளர் கே. டி. கோசல்ராம் அவர்களைப் பற்றி அரசியல் உலகம் மிக நன்கு அறியும். "தினச் செய்தி" என்ற தினஇதழுக்கு ஆசிரியர், புதுமை என்ற மாத ஏட்டிற்கு ஆசிரியர்—பிரபல காங்கிரஸகாரர்! திருநெல்வேலி மாவட்டத்திற்கு தூண்போல் நின்று பணியாற்றி வந்தவர்! காங்கிரஸ் கட்சியில் தான் கொஞ்சம் முற்போக்கு எண்ணம் படைத்தவர் என்பதை அடிக்கடி, பேச்சின் மூலமாகவும். எழுத்தின் மூலமாகவும், செய்கையின் மூலமாகவும் காட்டிக் கொண்டு வந்திருக்கிறார்!

ஒரு சிலரே பதவியில் இருந்து கொண்டு, வந்த சுதந்திரத்தின் பயனை அவர்களே அனுபவித்து வருவது, அவரது நல்லெண்ணத்திற்கு இடந்தரவில்லை! இதை சில சமயங்களில் பகிரங்கமாகவும். மறைமுகமாகவும் எதிர்த்து வந்திருக்கிறார், எதிர்த்து வந்திருக்கிறார்! என்றால் குழாய்ச் சண்டை போலவே எதிர்த்து வந்திருக்கிறார்!

இது சில காங்கிரஸ்காரர்களுக்குப் பிடிக்கவே இல்லை! "கோசல்ராம் அவர்களுக்கு பதவி ஆசை பிடித்து விட்டது, மந்திரியாக வேண்டும் என்று நினைக்கிறான்; தலைமைப் பதவிக்கு ஆசைப்படுகிறான்" என்றெல்லாம் ஒரு கோஷ்டியார் அவர் மீது குற்றப் பத்திரிகைகளை பகிரங்கமாகவும் மறைமுகமாகவும் சாட்டினார்கள்!

கோசல்ராம் கோஷ்டியைச் சார்ந்தவர்கள்– "ஆச்சாரியாரை விரட்டுவதற்கு எங்கள் கோசல்ராமும், சாமிநாதனும் எவ்வளவு பாடுபட்டார்கள்! அவர்கள் இல்லாவிட்டால் காமராஜருக்கு இவ்வளவு வலிவு வந்திருக்குமா? மந்திரி பதவி தான் கிடைத்திருக்குமா? தந்திரமாக, மந்திரி வேலை தருவதாக தட்டிக் கொடுத்து, வேலையை வாங்கிக் கொண்டு—காரியம் முடிந்தவுடன் காலை வாரி விட்டது" யார்? என்று பேச ஆரம்பித்தார்கள்!

அது முதல் காங்கிரஸ் கட்சியில் கோசல்ராம் அவர்களுக்கு ஏதும் முக்கிய இடம் கொடுக்கப் படவில்லை என்பதும் அரசியல் உலகம் அறியும்! ஆனால் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம், சமயம் வாய்க்கும் போதெல்லாம் காமராஜர் சர்க்கார் மீது பாணம் தொடுக்க தவறுவதேயில்லை!

கட்சிக் கட்டுப் பாட்டையெல்லாம் உடைத் தெறிந்து விட்டு காங்கிரஸ் கட்சியின் ஊழல்களை அம்பலப் படுத்தும் காங்கிரஸ் வீரர்கள் பலரில் கோசல்ராம் முதலிடம் பெற்றவர் என்பதை பலமுறை நாட்டுக்கு அறிவித்துக் கொண்டு வந்திருக்கிறார்!

சுருக்கமாகச் சொன்னால் கோசல்ராம் அவர்களைக் கண்டால் காமராஜருக்குப் பிடிக்காது, காமராஜரைக் கண்டால் கோசல்ராமுக்குப் பிடிக்காது என்ற எண்ணம் அரசியல் வட்டாரத்திலே நிலவி வருகிறது!

கோசல்ராம் நல்லவரா? கெட்டவரா? அதைப் பற்றி நமக்கு அக்கறை இல்லை! கோசல்ராம் மந்திரி பதவியில் அமர வேண்டும் என்ற மனப்பான்மை கொண்டவரா? இல்லையா? இதைப்பற்றி நமக்குக் கவலையும் இல்லை!

காங்கிரஸ்கட்சிக்குள் எத்தனையோ சண்டைகள், எத்தனையோ கோஷ்டிகள், எத்தனையோ பிளவு மனப்பான்மைகள் அதைப் பற்றி நாம் எழுத விரும்பவில்லை!

ஆனால் பொது மக்களுக்காகவே நிலச் சீர்திருத்தம் கொண்டு வந்ததாகச் சொல்லப்படுவதை திருவாளர் கோசல்ராம் அம்பலப் படுத்தி நாட்டுக்கு நல்ல சேவை புரிய வந்ததை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது!

தினச் செய்தி ஆசிரியர் திரு. கே. டி. கோசல்ராம. தமது "புதுமை" ஏட்டில்—"புலிக்கு புல் போடலாமா? என்ற தலைப்பில் காங்கிரஸ் கட்சியின் பிற்போக்கு தன்மையை மிகத் தெளிவாக விளக்கி—"மக்களே! ஏமாறுதீர்கள்!" என்று மறைமுகமாக எச்சரித்திருக்கிறார்! "வாழ்க! வாழ்க!" என அவரை வாழ்த்தக் கடமைப் பட்டிருக்கிறோம்! காங்கிரஸ் கட்சிக்கு வெளியிலிருந்து காங்கிரசை எதிர்ப்பதை விட, உள்ளேயே இருந்து கொண்டு ஊழல்களை அம்பலப்படுத்தி —காங்கிரஸ்கட்சியை அழிக்க பாடுபட்டு வரும் உங்களை எத்தனை தரம் போற்றினாலும், பாராட்டினாலும் தகும்! தமிழகத்தின் சாரில் எங்கள் நன்றி!

"திருவாளர் கோசல்ராம், தடித்த கதர்ச் சட்டைக்காரர், அவரா காங்கிரஸ் கட்சியை எதிர்பார்? அவரா குடும்பத்தில் பிளவை ஏற்படுத்துவார்" என்று பலர் கேட்கக் கூடும்! அவரே எழுதுகிறார். இத்திங்கள் வெளிவந்திருக்கும் "புதுமை" ஏட்டில் கவனியுங்கள்!

"காலம் தாழ்ந்து, 'புலிவருகிறது...புலி வருகிறது' என்பது போல உடைமைக்காரர்களுக்குப் போதிய எச்சரிக்கையோடு இம்மசோதா வந்துள்ளதென்றாலும்—நாம் பொதுப் படையாக இதை வரவேற்கிறோம்."

மிட்டாகளுக்கும், நில முதலைகளுக்கும் முன் கூட்டியே அறிவித்து—அவர்களுக்கு ஓர் கேடும் ஒரு தீமையும் வராத வண்ணம் பாதுகாக்கப்பட்ட பின்பே நிலச் சீர்திருத்தம் கொண்டு வந்ததாக நண்பர் கோசல்ராம் இந்த சர்க்கார் மீது பகிரங்கமாக குற்றம் சாட்டி இருக்கிறார்! "இருந்த போதிலும் இதைப் பொதுப் படையாக வரவேற்கிறேன்" என்று கூறுகிறார்! அதாவது மனப் பூர்வமாக வரவேற்க முடியாது. அதிலுள்ள நோக்கங்களை வரவேற்க முடியாது! பொதுப் படையாக—நிலச் சீர்திருத்தத்தை வரவேற்கிறேன் என்று கூறுகிறார்! காங்கிரஸ்காரர எனவே நம்மைப் போல் "ஓட்டு வேட்டைக்கு" என்ற வார்த்தையைப் பயன் படுத்தவில்லை!

அவர் மேலும் எழுதுகிறார் கவனியுங்கள்!

"நல்ல முறையில் நீர் இறைக்க விரும்புகிறவன், ஓட்டை வாளியை உபயோகிக்கக் கூடாது. அந்த போல் இம்மசோதாவில் உள்ள குறைகள் நீக்கபடாவிட்டால்—'நோக்கம்' நிறைவேறாது போய்விடும் என்பதையும் உணர வேண்டும்

மேல் வரம்புக்கு மேல் மிச்சப் படும் நிலத்தை அரசாங்கம் என்ன செய்யப் போகிறது? என்பது பற்றித் தீவிர சிந்தனை செலுத்துதல் அவசியம்.

சாகுபடியாளராகிய விவசாயிக்கு சாகுபடி உரிமை அளிப்பது மிகவும் முக்கியமானது.

அதே போல், சொந்த சாகுபடி என்ற போர்வையில், உழவனை வெளியேற்ற நடக்கும் முயற்சிகளையும் முறியடித்தாக வேண்டும்.

புண்ணுக்கு மருந்திடப் போய் அதை மறந்து கிளறி விடுதல்' போல உச்சவரம்புச் சட்டம் ஆகிவிடாது, பார்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த எழுத்துகளுக்கு என்ன பொருள்! ஓட்டை வாளியைக் கொண்டு தண்ணீர் இறைப்பதைப் போல் நிலச் சீர்திருத்தம் இருக்கிறது! ஓட்டையை அடைக்காவிட்டால் ஏழைகளுக்கு எதுவும் பயன் தராது! "மிச்ச நிலத்தை சர்க்கார் என்ன செய்யப் போகிறது? அதற்கேன் திட்டம் இல்லை" என்றெல்லாம் காங்கிரஸ் சர்க்கார் மீது பகிரங்கமாக குற்றம் சாட்டி இருக்கிறார்!

மேலும் அவர் இந்த சர்க்கார் மீது அக்கினிப் பிழம்பை வாரி வாரி இறைப்பதை கவனியுங்கள்!

மற்றொரு முக்கிய பிரச்னை, மடங்களின் நிலங்களைப் பற்றியது.

மடாதிபதிகளே காட்டாத எதிர்ப்பை 'மடநிலங்களுக்கு வரம்பு கட்டக் கூடாது.' என்று கூறுவோர் காட்டுவது விந்தைக்குரியது.

மத உரிமையில் தலையிடக் கூடாது என்றாலும், எந்த உருவத்திலும் சுரண்டலும், சோம்பேறித் தனமும் இருக்கக் கூடாது என்றால் நிச்சயம் மடங்களையும் இச்சட்ட வரம்பினுள் கொண்டு வந்தாக வேண்டும்.

சிறந்த ஆஸ்திகரும், முதலமைச்சராக இருந்து அனுபவ அறிவு பெற்றவருமான திரு. ஓமந்தூர் ரெட்டியாரே, மடங்களின் தற்போதைய நிலைபற்றி அதிருப்தி தெரிவித்திருப்பதை சிந்திக்க வேண்டும்.

பெருமளவு செல்வத்தால் அறப்பணிகளை வளர்க்க மறந்து மட நிர்வாகங்கள் இருட்டுக் கூத்துகளைச் செய்து வருபவைகளாக மாறி விட்டன.

மடத்துகளுச் சொந்தமான நிலங்கள் நாடெங்கும் பரந்து கிடப்பதும் ஆங்காங்கு ஆண்டவன் பெயரைச் சொல்லி அக்கிரமங்களும், சுரண்டல்களும் நடப்பதும் அரசியல் கட்சிகள் அத்தனைக்கும் அங்கு இடமிருப்பதையும கண்கூடாகப் பார்க்கிறோம்.

அறப்பணிகள் செவ்வனே நடக்க, திருவிதாங்கூரில் திரு சி. பி. செய்த 'தல்ஙக்' ஏற்பாடு

(11ம் பக்கம் பார்க்க)

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ்,
404 திருவல்லிக்கேணிஹைரோடு, சென்னை-5 அலுவலகம்: 1-35, வாணியர் தெரு. சென்னை-14.